# எளிய தமிழில் BIG DATA

து. நித்யா

# எளிய தமிழில் Big Data

து.நித்யா

**‘Data is the new Oil’** என்பது புதுமொழி. இணைய தளங்கள், கைபேசி செயலிகள் யாவும் தம் பயனரின் அனைத்து செயல்களையும் தகவல்களையும் சேமித்து வருகின்றன. இவ்வாறு சேமிப்பதும், அவற்றில் இருந்து பயனுள்ள தகவல்களை தேடி எடுப்பதும், சில ஆண்டுகளுக்கு முன் சாத்தியமே இல்லை. குறைந்து வரும் வன்பொருள் விலையும், சிறந்த கட்டற்ற மென்பொருட்களும் இணைந்து, பல்லாயிரம் சாத்தியங்களுக்கும், சாதனைகளுக்கும் வழிவகுத்துள்ளன.

**Big Data** — பெருந்தரவு. இதை **Mainframe, Super Computer** போன்ற எந்த சிறப்பு கட்டமைப்புகளும் இன்றி, நமது கணினிகள், மடிக்கணினிகள் கொண்டே, **Cluster** உருவாக்கி, **Elasticsearch, Hadoop, Spark** போன்ற கட்டற்ற மென்பொருட்களை நிறுவி, கற்கவும், செயல்படுத்தவும் முடியும். இவற்றை, இந்த நூல் எளிமையாக அறிமுகம் செய்கிறது.

தமிழில் கட்டற்ற மென்பொருட்கள் பற்றிய தகவல்களை "கணியம்" மின் மாத இதழ், **2012** முதல் வெளியிட்டு வருகிறது. இதில் வெளியான **Bigdata** பற்றிய கட்டுரைககளை இணைத்து ஒரு முழு புத்தகமாக வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம்.

உங்கள் கருத்துகளையும், பிழை திருத்தங்களையும் **editor@kaniyam.com** க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

**http://kaniyam.com/learn-bigdata-in-tamil-ebook** என்ற முகவரியில் இருந்து இந்த நூலை பதிவிறக்கம் செய்யலாம். உங்கள் கருத்துகளையும் இங்கே பகிரலாம். படித்து பயன் பெறவும், பிறருடன் பகிர்ந்து மகிழவும் வேண்டுகிறோம்.

கணியம் இதழை தொடர்ந்து வளர்க்கும் அனைத்து அன்பர்களுக்கும் எமது நன்றிகள்.

த.சீனிவாசன்
**tshrinivasan@gmail.com**

ஆசிரியர்
கணியம்
**editor@kaniyam.com**

# எளிய தமிழில் Big Data

முதல் பதிப்பு ஜூன் 2018

பதிப்புரிமம் © 2018 கணியம்.

ஆசிரியர் - து.நித்யா - nithyadurai87@gmail.com

பிழை திருத்தம்: த.சீனிவாசன் - tshrinivasan@gmail.com

அட்டைப்படம், வடிவமைப்பு: த.சீனிவாசன்

இந்த நூல் கிரியேடிவ் காமன்ஸ் என்ற உரிமையில் வெளியிடப்படுகிறது . இதன் மூலம், நீங்கள்

- யாருடனும் பகிர்ந்து கொள்ளலாம்.
- திருத்தி எழுதி வெளியிடலாம்.
- வணிக ரீதியிலும்யன்படுத்தலாம்.

ஆனால், மூலப் புத்தகம், ஆசிரியர் மற்றும் www.kaniyam.com பற்றிய விவரங்களை சேர்த்து தர வேண்டும். இதே உரிமைகளை யாவருக்கும் தர வேண்டும். கிரியேடிவ் காமன்ஸ் என்ற உரிமையில் வெளியிட வேண்டும்.

நூல் மூலம் :

http://static.kaniyam.com/ebooks/learn-bigdata-in-tamil/learn-bigdata-in-tamil.odt

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 Unported License.

# பொருளடக்கம்


முன்னுரை........8
ஆசிரியர் உரை........9
1 Big Data - ஓர் அறிமுகம்........11
2 ELK Stack - ஓர் அறிமுகம்........16
2.1 ELK-ஐ Ubuntu கணினியில் நிறுவுதல்........16
3 Elastic Search........19
3.1 ஒருசில அடிப்படைப் பதங்கள்........20
3.1.1 Node........20
3.1.2 Shards........21
3.1.3 Index........22
3.2 Curl கட்டளையின் மாதிரி வடிவம்........22
3.2.1 எடுத்துக்காட்டு 1........23
3.2.2 எடுத்துக்காட்டு 2........24
3.2.3 எடுத்துக்காட்டு 3........25
3.2.4 எடுத்துக்காட்டு 4........26
3.2.5 எடுத்துக்காட்டு 5........28
3.2.6 எடுத்துக்காட்டு 6........30
3.2.7 எடுத்துக்காட்டு 7........31
3.2.8 எடுத்துக்காட்டு 8........32
3.2.9 எடுத்துக்காட்டு 9........33
3.2.10 எடுத்துக்காட்டு 10........33
3.2.11 எடுத்துக்காட்டு 11........34
3.2.12 எடுத்துக்காட்டு 12........35
4 Logstash........36
4.1 ஒரு கோப்பிலிருந்து தரவுகளை உள்ளெடுத்தல்........37
4.1.1 Config File........37
4.1.2 கட்டளை........40
4.2 Twitter போன்ற நிகழ்கால தரவுகளை உள்ளெடுத்தல்........40
5 Kibana........42
5.1 Management........43
II. Discover........47
5.2 III. Visualize........53
5.3 IV. Dashboard........56
5.4 V. Dev Tools........59
6 HADOOP........62
6.1 வரலாறு........62
6.2 HADOOP கட்டமைப்பு........63
6.2.1 HDFS........64
6.2.2 Hbase........64
6.2.3 MapReducer........65
6.2.4 YARN........65
6.2.5 Pig........65
6.2.6 Hive........66
6.2.7 Mahout........66
6.2.8 Avro........66
6.2.9 Sqoop........67
6.2.10 Oozie........67

6.2.11 Chukwa....68
6.2.12 Flume....68
6.2.13 Zoo Keeper....68
7 HDFS, Mapreducer....70
8 PIG....90
8.1 Pig-ன் சிறப்பியல்புகள்....91
8.2 Pig-ல் பயன்படுத்தப்படும் முக்கியப் பதங்கள்....91
8.3 மற்றவைகளோடு Pig-ன் ஒப்பீடு....92
9 Hive....112
9.1 Hive-ன் சிறப்பம்சங்கள்....112
9.2 Hive-ஐ நிறுவுதல்....113
9.3 Hive-ன் செயல்பாடுகள்....118
10 Spark....139
10.1 Spark-ன் கட்டமைப்புக் கூறுகள்....140
10.2 Spark-ஐ நிறுவுதல்....141
10.3 Resilient Distributed Datasets....143
10.4 Spark – Mysql இணைப்பை ஏற்படுத்துதல்....145
10.5 Dataframes-ன் செயல்பாடுகள்....150
10.6 Text file-ஐ process செய்தல்....156
10.7 Union, Join, Intersection....160
10.8 User defined functions....161
11 முடிவுரை....165
12 ஆசிரியர் பற்றி....167
13 ஆசிரியரின் பிற மின்னூல்கள்....168
14 கணியம் பற்றி....171
15 நன்கொடை....174

## முன்னுரை

பெரும்தரவு (Bit Data) என்பது தற்போது அதிகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பம். . ஆனால் இத்துறையில் அனுபவம் கொண்டவர்கள் மிகவும் குறைவே.! எனவே இத்துறையில் உள்ள சில பல முக்கியக் கருவிகளைப் பற்றி அடிப்படை அறிவு வளர்த்துக் கொண்டால் போதும். இத்துறையில் நுழைந்து நாம் வல்லுனராகிவிடலாம். இதனை மனதில் கொண்டு இப்புத்தகத்தில் நாம் ELK Stack, Hadoop மற்றும் Spark ஆகிய கருவிகளைப் பற்றிக் கற்கப் போகிறோம். பெரும் தரவுகளில் "நிகழ்காலத் தரவுகளைக் கையாளுவது" மற்றும் "வரலாற்றுத் தரவுகளைக் கையாளுவது" என்று இரண்டு விதங்கள் உள்ளன. உதாரணத்துக்கு twitter, facebook போன்ற நிறுவனங்களுக்கு ஒவ்வொரு நிமிடமும் தரவுகள் வந்த வண்ணம் இருந்து கொண்டே இருக்கும். எனவே இத்தகைய நிறுவனங்களுக்கு நிகழ்காலத் தரவுகளைக் கையாளுவதற்கான தேவை அதிகமாக இருக்கும். இதையே 'Real Time Analysis' என்போம். வேறு சில நிறுவனங்கள் பழைய தரவுகளை எடுத்து அதனை ஆய்வு செய்து அதனடிப்படையில் தேர்ந்த முடிவுகளை எடுக்கும். இதையே 'Historical Analysis' என்று கூறுவர். நிகழ்காலத் தரவுக்கு ELK Stack-ஐயும் வரலாற்றுத் தரவுக்கு hadoop-ஐயும் பார்க்கப் போகிறோம். மேலும் spark எவ்வகையில் hadoop-ஐ விட மேன்மையான செயல்பாடுகள் கொண்டு விளங்குகிறது என்பதையும் இதில் காணலாம்.

# ஆசிரியர் உரை

சமீப காலத்தில் நான் ஒருசில காரணங்களால் இருக்கும் வேலையை விட்டுவிட்டு புதிய வேலை தேடிக் கொண்டிருந்தேன். இது உண்மையிலேயே மிகவும் கடினமான காலகட்டமாக எனக்கு இருந்தது. 10 வருடமாக 'Datawarehouse Testing' துறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்த நான், இப்போது வேலை தேடும்போது என்னுடைய இத்தனை வருட அனுபவத்திற்கான வாய்ப்பு மிகவும் குறைந்து விட்டதை உணர்ந்தேன். பெரும் நிறுவனங்களில் இருந்து எனக்கு நேர்காணல் அழைப்புகள் வந்து கொண்டே இருந்தாலும், என்னவோ தெரியவில்லை. அனைத்து சுற்றுகளிலும் நான் தேர்வாகினாலும், கடைசி சுற்றில் நிராகரிக்கப்பட்டுவிடுவேன். எனது 10 வருட அனுபவம் பிரச்சனையா, அல்லது குறைந்த அனுபவம் கொண்டவர்களையே அதிகம் தேர்வுசெய்கிறார்களா, அல்லது என்னிடம் இன்னும் நிறைய திறமைகளை எதிர்பார்க்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நன்றாக விளங்கியது. என்னுடைய Manual மற்றும் ETL Testing அனுபவத்தை மட்டும் வைத்துக் கொண்டு எனக்கான ஒரு நல்ல வேலையைத் தேடுவது என்பது எட்டாக் கனியாகத் தோன்றியது. என்னுடைய திறமைகளை வளர்த்துக் கொள்வததைத் தவிர எனக்கு வேறு வழியே தோன்றவில்லை. இந்த சமயத்தில்தான் ஏதாவதொரு நிறுவனத்தில் சேர்ந்து Bigdata பற்றிய படிப்பினைப் படித்து முடித்துவிட்டு மீண்டும் வேலை தேடலாம் என்று யோசித்தேன். ஆனால் அதற்கான பயிற்சித் தொகையோ மிகவும் அதிகமாக இருந்தது. கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் கேட்டார்கள்.. இவ்வளவு ரூபாய் கட்டிப் படித்தாலும் வேலைக்கு உத்தரவாதம் இல்லை. எனவே இதிலும் மனம் செல்லவில்லை.

இச்சூழ்நிலையில் தான் எந்த ஒரு பயிற்சி நிறுவனமும் போகமால் Big data-பற்றிய விஷயங்களை என் சொந்த முயற்சியில் நானே படிக்க ஆரம்பித்தேன்.. இத்தொழில்நுட்பத்தில் உள்ள ஒருசில முக்கியக் கருவிகளைக் கற்றேன்.. இதுவே எனக்கு நல்ல நல்ல வாய்ப்புகள் கிடைக்க வழிவகை செய்தது. கடும் பயிற்சிக்குப் பிறகு, எனது சுய விவர அறிக்கையில் Elasticsearch, hadoop-ஐ சேர்த்தேன். நேர்காணல்களில் Hadoop-ஐப் பற்றிப் பேச ஆரம்பித்தேன். மேலும் பல பயிற்சிகள், கற்றல்களள், நேர்முகத் தேர்வுகளுக்குப் பின், இப்போது ஒரு நிறுவனத்தில் IOT எனும் துறையில் தேர்வாகியுள்ளேன்.. இதுவரை நான் கற்றவற்றை இப்புத்தகத்தில் எழுதியுள்ளேன். இத்தனை இப்போது உங்கள் அனைவரிடமும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

*நான்* BigData *கற்ற போது எழுதிய குறிப்புகளைக் கொண்டு கணியம் இதழில் தொடராக எழுதினேன். அதே தொடர் இப்போது மின்னூலாக வெளியிடப்படுவது மிக்க மகிழ்ச்சி.*

*தமிழில் கணிணி நுட்பங்களைப் பகிர, ஒரு களமாக உள்ள 'கணியம்' தளத்தில், இதுவரை வெளியான எனது மின்னூல்களுக்கு வாசகர்கள் தரும் ஆதரவு பெருமகிழ்ச்சி அளிக்கிறது.*

*"தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"*

*"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"*

*என்ற பாரதியின் விருப்பங்களை நிறைவேற்றுவதில், என் பங்களிப்பும் உள்ளது என்பதே, மிகவும் மகிழ்ச்சி.*

*தொடர்ந்து ஊக்கம் அளிக்கும் என் குடும்பத்தினருக்கும், கணியம் குழுவினருக்கும், FreeTamilEbooks.com குழுவினருக்கும், வாசகர்களுக்கும் நன்றிகள்.*



*து. நித்யா*

*சென்னை*

*28 ஜூன் 2018*

*மின்னஞ்சல்:* nithyadurai87@gmail.com

*வலை பதிவு:* [http://nithyashrinivasan.wordpress.com](http://nithyashrinivasan.wordpress.com)

# 1 Big Data - ஓர் அறிமுகம்




source -
https://commons.wikimedia.org/wiki/File:BigData_2267x1146_white.png

நமது ஊரில் உள்ள பழக்கப்பட்ட மளிகைக் கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கும்போது, அந்தக் கடைக்காரருக்கு நம்மைப் பற்றிய விவரம் முழுவதும் தெரிந்திருக்கும். மேலும் அவர் நம்முடன் கொண்ட பழக்கத்தினால் நமக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்பதை சற்று கணித்து வைத்திருப்பார். எனவே நமது ரசனைக்கேற்ப அவரிடம் ஏதேனும் புது சரக்குகள் வந்து இறங்கியிருப்பின், அதனை நம்மிடம் காட்டி 'இது உங்களுக்கு மிகவும் பிடிக்கும். பயன்படுத்தித்தான் பாருங்களேன்'' என்பார். நாமும் "சரி! வாங்கித்தான் பார்ப்போமே!" என்று வாங்கிவிடுவோம். இதனால் அவரது வியாபாரமும் பெருகுகிறது, நமக்கும் நமக்கு பிடித்த பொருட்களை வாங்குவது எளிதாகிறது.

இது போன்ற விஷயங்களெல்லாம் இப்போது கணினி வழியே நடைபெறுகின்றன. இப்போதெல்லாம் நாம் கடைக்குச் சென்று பொருட்களை வாங்காமல் கணினி வழியே வாங்குகின்றோம். எனவே கடைக்காரருக்கோ கணினி வழியேயே நமது விவரங்களையும், நமது ரசனைகளையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. உதாரணத்துக்கு Flipkart, Amazon போன்ற வலைத்தளங்களில் நாம் ஒரு கைக்கடிகாரத்தை வாங்குகிறோம் எனில், பின்னர் நாம் அடுத்த முறை அந்த வளைத்தளத்திற்குச் செல்லும்போது, புதிய அழகழகான கைக்கடிகாரங்களெல்லாம் நமக்கு விளம்பரங்களாக வரும். நாம் எந்த பொருளின்மீது அதிக விருப்பம் காட்டுகிறோமோ, அந்த பொருளும் நம் கண்ணில் அடிக்கடி தென்படுமாறு வந்துபோகும். அதாவது அந்த கடைக்காரர் கணினி வழியேயே நமது ரசனையைத் தெரிந்துகொண்டார். இதுவே 'Machine Learning' என்று அழைக்கப்படும். இந்த Machine Learning-ன் அடிப்படையில் அமைவதே 'Artificial Intelligence' ஆகும். அதாவது நமது விருப்பு வெறுப்புகளைப் பற்றிய அறிவினை கணினி செயற்கை முறையில் பெற்றுவிடுகிறது. இவையெல்லாம் எப்படி சாத்தியப்பட்டது என்று சிந்தித்துப் பார்த்தால் அவை அனைத்தும் Big Data-வின் அம்சங்களே !

ஆரம்ப காலகட்டத்தில் நமது தொழிலை திறம்பட நடத்துவதற்காக ஒருசில முக்கியமான விஷயங்களை எல்லாம் நாம் நினைவில் வைத்துக்கொண்டோம். பின்னர் நினைவில் வைத்துக்கொள்ள முடியாத அளவுக்கு விஷயங்கள் சேர்ந்து விடும்போது, அதனை ஒரு நோட்டில் எழுதி வைக்கத் தொடங்கினோம். பின்னர் நோட்டுகளும் பத்தவில்லையென்று கணினியில் விவரங்களை சேமித்து வைத்தோம். பின்னர் ஒரு கணினியால் சேமித்து வைக்கக் கூடிய எல்லையையும் தாண் டினோம். உதாரணத்துக்கு ஒரு நோட்டில் 2000 வரிகள் தான் எழுத முடியும் என்பது போல ஒரு கணினியிலும் 1TB வரைதான் data-வை சேமிக்க முடியும் என்று இருக்கலாம். நாம் சேமிக்க வேண்டிய தகவலின் அளவு 1TB -ஐத் தாண்டும்போது, நமது இரண்டாவது கணினியில் சென்று தகவலைச் சேமிக்க ஆரம்பிப்போம். இதுவே 'Clustered systems' / 'Distributed systems' எனப்படும். நம்மிடம் 10 கணினிகள்தான் இருக்கிறதெனில் 10TB-வரைதான் நம்மால் data-வை சேமிக்க முடியும். அதுவே நாம் சேமிக்க வேண்டிய தகவலின் அளவு 10TB-ஐத் தாண்டும்போது, நாம் புதுப்புது கணினிகளை வாங்கி சேர்த்துக்கொண்டே போகாமல், சேமிப்பிற்கான இடத்தை மட்டும் ஒருசில நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்டு பயன்படுத்தினோம். இதுவே 'Cloud Storage' எனப்படும். அதாவது இத்தகைய cloud computers-ஐ நம்மால் பார்க்க முடியாது (virtual). ஆனால் நமது கணினியைப் போன்றே அதிலும் அனைத்து வேலைகளையும் செய்யலாம். Amazon, Google, Cloudera போன்றவை இத்தகைய services-ஐ வழங்குகின்றன.

ஒரு நோட்டில் எழுதக் கூடிய அளவுக்கு அனைத்து தகவல்களும் இருந்த மட்டும், நமக்கு வேண்டிய ஒருசில தகவல்களை தேடி எடுப்பது, அதனை ஆராய்வது, அதனடிப்படையில் முடிவுகளை எடுப்பது என்பது போன்ற விஷயங்களெல்லாம்

நம்மால் சாதாரணமாக செய்ய முடிந்தது. ஆனால் தற்போதோ பல்வேறு முறையில் இணைக்கப்பட்ட கணினிகளிலிருந்து கோடிக்கணக்கான தகவல்களை அலசி ஆராய்ந்து அதனடிப்படையில் நமது வளர்ச்சிக்குத் தேவையான முடிவுகளை எடுப்பதற்கு உதவுவதே Big Data ஆகும். இது பெரும்பாலும் மின்வர்த்தகம் மற்றும் சமூக ஊடகத் துறைகளில் பெரும்பான்மையான பொறுப்புகளை ஏற்கிறது.

மேலும் வானியல், பொருளாதாரம், வேதியியல், போக்குவரத்து, ஆராய்ச்சி போன்ற பலதரப்பட்ட துறைகளிலும் இப்போது Big Data என்பது தலையெடுக்கத் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு துறையும் அதனதன் வளர்ச்சிக்காகவும், திறம்படச் செயல்புரிவதற்காகவும் மிக மிக நுண்ணிய தகவல்களையெல்லாம் இப்போது சேமித்து வைக்கத் துவங்கியுள்ளது. இத்தகைய எண்ணிலடங்கா தகவல்களையெல்லாம் எங்கு சேமித்து வைப்பது (Data storage), அதனை எவ்வாறு தரம் பிரிப்பது (Data Mapping), மிக முக்கிய தகவல்களை மட்டும் எவ்வாறு மொத்த தகவல்களிலிருந்து பிரித்தெடுப்பது (Data Mining), பிரித்தெடுத்த தகவல்களை எவ்வாறு ஒன்றோடொன்று இணைத்து (Data Pipeline)அர்த்தமுள்ள தரவுகளாக மாற்றுவது, அதனை எவ்வாறு பயனருக்கு சமர்ப்பிப்பது (Visualization of Reports) போன்ற அனைத்து வேலைகளையும் “பெரிய தரவு” எனும் “Big Data” புரிகிறது.

இந்த பெரிய தரவானது ஒழுங்கான வடிவத்தில் உள்ள விவரங்களை சேமிப்பத்தோடு மட்டுமல்லாமல், ஒழுங்கற்ற வடிவத்திலிருக்கும் விவரங்களையும் சேமிக்கும் வல்லமை கொண்டது. அதாவது ஒருவரின் பெயர், வயது, ஊர், மின்னஞ்சல் முகவரி போன்றவை எல்லாம் ஒழுங்கான வடிவத்தில் உள்ள தரவுகள் (Structured data). ஆனால் facebook போன்ற வலைத்தளத்தில் ஒரு பயனரின் அடிப்படை விவரங்களோடு சேர்த்து அவரின் மனநிலை , விருப்பு வெறுப்புகள், செயல்பாடுகள், விமர்சனங்கள் போன்ற அனைத்து விதமான தகவல்களையும் சேமிக்க வேண்டும். இவையெல்லாம் எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம். ஒருவர் தனது மனநிலையை வார்த்தைகளாகவும் வெளிப்படுத்தலாம், படங்களாகவும் வெளிப்படுத்தலாம். எனவே இவை எந்த வடிவத்தில் இருக்கும் என்பதை நம்மால் கணிக்க முடியாது. இவையே ஒழுங்கற்ற வடிவத்தில் இருக்கும் தகவல்களாக (Unstructured data) சேமிக்கப்படுகின்றன.

பல்வேறு நிறுவனங்கள் பெரிய தரவில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் புரிவதற்காக பல்வேறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கருவிகளை உருவாக்குகின்றன. இறுதியில் அக்கருவிகளை ஒன்றாக இணைத்து ஒரு package-ஆக அந்நிறுவனம் வழங்குகின்ற பெரிய தரவுக்கான ஒரு கருவியாக வெளியிடுகின்றன. Hadoop, Spark, Druid, ELK ஆகியவை தற்போது சந்தையில் புகழ்பெற்று விளங்குகின்ற பெரிய தரவுக்கான திறந்த மூல மென்பொருள் கருவிகளாகும். இவற்றை Apache, Cloudera, Amazon போன்ற நிறுவனங்கள் வழங்குகின்றன.




source: https://www.flickr.com/photos/dionh/7550578346

YARN என்பது பல்வேறு கணினிகளில் சேமிக்கப்பட்ட விவரங்களை கையாளுவதற்கு (cluster management) உதவும் ஒரு மென்பொருள் பயன்பாடு ஆகும். DFS (distributed file system), MongoDB போன்றவை பல்வேறு விதங்களில் வருகின்ற தகவல்களை சேமிக்க உதவும் சேமிப்புக் கிடங்குகள் ஆகும். Mapper என்பது முதல் நிலை தரவுகளை எடுத்து அவற்றை சுருக்கி (key, value) pairs-ஆக சேமிக்கும். Reducer என்பது Mapper-வெளிப்படுத்தும் இணைகளை மீண்டும் சுருக்கி ஒரு அர்த்தமுள்ள விதத்தில் சேமித்து வைத்துக்கொள்ளும். Mapper மற்றும் Reducer இவை இரண்டும் சேர்ந்து 'MapReducer' என்று அழைக்கப்படும். இது Java-வைப் பயன்படுத்தி எழுதப்பட்ட ஒரு library ஆகும். Pig & Hive ஆகியவை Map Reducer library- ஐப் பயன்படுத்துவதற்கு உதவும் மொழிகளாகும். இவற்றையெல்லாம் பயன்படுத்தி உருவாக்கப்பட்டதே Hadoop எனப்படும் ஒரு கட்டமைப்பு. Datameer, Tableau என்பது கடைசியாக மேல்மட்ட அதிகாரிகள் அவர்கள் விரும்பும் விதத்தில் அறிக்கை எடுக்க உதவும் கருவிகள் ஆகும்.

அடுத்ததாக ELK என்பது Elastic search, Logstash & Kibana எனும் 3-ஐயும் இணைத்து உருவாக்கப்பட்ட கட்டமைப்பு ஆகும். இதில் Elastic search என்பது முதல் நிலை தகவல்களை சேமிக்க உதவும் ஒரு Engine ஆகும். Logstash என்பது கோப்பு வடிவத்திலோ அல்லது வலைத்தளத்திலோ இருக்கும் தகவல்களை Engine-க்குள்

செலுத்த உதவும் கருவி ஆகும். Kibana என்பது Engine-ல் இருந்து தகவல்களை அறிக்கைக்கு தேவையான விதத்தில் தேடி எடுத்து வெளிப்படுத்த உதவும் கருவி ஆகும்.

இவ்வாறே Spark, Druid போன்றவை அதற்கென்று ஒவ்வொரு கட்டமைப்பைப் பெற்றுத் திகழுகின்றன. இனிவரும் பகுதிகளில் மேற்கூறியவற்றில் ஏதேனும் ஒரு கட்டமைப்பைப் பற்றி விரிவாகக் காணலாம்.

# 2 ELK Stack - ஓர் அறிமுகம்

ELK Stack என்பது Logstash, Elastic Search, Kibana எனும் 3 தனித்தனி திறந்த மூல மென்பொருள் கருவிகளின் கூட்டமைப்பு ஆகும். இவை முறையே 2009 , 2010, 2011 ஆகிய ஆண்டுகளில் தனித்தனி நபர்களால் உருவாக்கப்பட்டு தனித்தனி திறந்தமூலக் கருவிகளாக வெளிவந்து கொண்டிருந்தன. பின்னர் 2012-ஆம் ஆண்டு "Elastic Search" எனும் நிறுவனம் உருவாக்கப்பட்ட பின்னர், ஒவ்வொருவராக அந்நிறுவனத்தில் இணைய, அவர்கள் உருவாக்கிய கருவிகளும் இணைக்கப்பட்டு "ELK Stack" எனும் பெயரில் பெரிய தரவுக்கான ஒரு கருவியாக வெளிவந்தன. இதில் Elastic search என்பது முதல் நிலை தகவல்களை சேமிக்க உதவும் ஒரு Engine ஆகும். Logstash என்பது கோப்பு வடிவத்திலோ அல்லது வலைத்தளத்திலோ இருக்கும் தகவல்களை Engine-க்குள் செலுத்த உதவும் கருவி ஆகும். Kibana என்பது Engine-ல் இருந்து தகவல்களை அறிக்கைக்கு தேவையான விதத்தில் தேடி எடுத்து வெளிப்படுத்த உதவும் கருவி ஆகும். இப்போது இவற்றில் உள்ள ஒவ்வொரு கருவிகளின் செயல்பாடுகளைப் பற்றியும் கீழே விளக்கமாகக் காணலாம்.

## 2.1 ELK-ஐ Ubuntu கணினியில் நிறுவுதல்

ELK இயங்குவதற்கு Java தேவை. பின்வரும் 3 கட்டளைகள் Java-வை install செய்யும்.

```
sudo add-apt-repository -y ppa:webupd8team/java
sudo apt-get update
sudo apt-get -y install oracle-java8-installer
```

இப்போது பின்வருமாறு கொடுத்து java முறையாக நிறுவப்பட்டுவிட்டதா என்று பார்க்கவும்.

java -version

வெளியீடு:

```
java version "1.8.0_131"
Java(TM) SE Runtime Environment (build 1.8.0_131-b11)
Java HotSpot(TM) 64-Bit Server VM (build 25.131-b11, mixed mode)
```

அடுத்ததாக கீழ்க்கண்ட 4 கட்டளைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக இயக்கவும்.

```
wget -qO - https://artifacts.elastic.co/GPG-KEY-elasticsearch | sudo
apt-key add -

sudo apt-get install apt-transport-https

echo "deb https://artifacts.elastic.co/packages/5.x/apt stable main" |
sudo tee -a /etc/apt/sources.list.d/elastic-5.x.list


sudo apt-get update && sudo apt-get install elasticsearch logstash
kibana
```

இப்போது ELK வெற்றிகரமாக நிறுவப்பட்டுவிட்டது. இவற்றைப் பயன்படுத்தி எந்த ஒரு வேலையையும் செய்வதற்கு முன்னர் இவைகளின் செயல்பாடுகளைத் துவக்க வேண்டும். அதற்கான கட்டளை பின்வருமாறு அமையும்.

```
sudo service elasticsearch start
sudo service logstash start
sudo service kibana start
```

பின்னர் இவற்றின் தற்போதைய நிலைகளை அறிந்து கொள்ள பின்வரும் கட்டளையைப் பயன்படுத்தலாம். இது Active / Inactive எனும் மதிப்புகளைப் பெற்றிருக்கும்.

```
sudo service elasticsearch status
sudo service logstash status
sudo service Kibana status
```

அவ்வாறே இவைகளின் செயல்பாடுகளை நிறுத்துதல், மீண்டும் துவக்குதல் போன்ற செயல்களைச் செய்வதற்குப் பின்வரும் கட்டளைகள் பயன்படும்.

```
sudo service elasticsearch stop
sudo service logstash stop
sudo service kibana stop

sudo service elasticsearch restart
sudo service logstash restart
sudo service kibana restart
```

# 3 Elastic Search

ElasticSearch என்பது பல கோடிக்கணக்கான தரவுகளை சேமித்து வைத்துக்கொண்டு, நாம் கேட்கும் நேரங்களில் கேட்கும் தகவல்களை துரிதமாக வெளிப்படுத்த உதவும் ஒரு சேமிப்புக் கிடங்கு மற்றும் தேடு இயந்திரம் (Storage area & Search engine) ஆகும். தேடலிலும் நமக்கு உதவும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. GitHub, Google, StackOverflow, Wikipedia போன்றவை இதனைப் பயன்படுத்தி அதிக அளவு தகவல்களை சேமிப்பதோடு மட்டுமல்லாமல், பயனர்கள் தங்கள் விருப்பம்போல் தகவல்களை தேடி எடுப்பதற்கு ஏற்ற வகையில் தேடும் திறனையும், வேகத்தினையும் துரிதமாக்குகின்றன. எடுத்துக் காட்டுக்கு, Google-ல் நாம் எதையாவது கொடுத்து தேடும்போது, நாம் கொடுக்கின்ற வார்த்தைகளில் முழுவதுமாகப் பொருந்தக் கூடிய இணைப்புகளை முதலாவதாகவும், சற்று ஓரளவு தொடர்புடைய வார்த்தைகளைப் பெற்றுள்ள இணைப்புகளை அடுத்தடுத்தும் வெளிப்படுத்தும். அவ்வாறே நாம் தேடுவதற்காக வார்த்தைகளை அடிக்கும்போதே 'suggessions' என்ற பெயரில் நம் தேடலுக்கு ஏற்ற வார்த்தைகளை அதுவே நமக்கு பரிந்துரைக்கும். இவையெல்லாம் Elastic Search-ன் அம்சங்களே.

வாக்கியங்கள்/வார்த்தைகளின் அடிப்படையில் துரிதமாகத் தேடல்களை நிகழ்த்துவதற்கு ஏற்ற வகையில் முதன்முதலில் வடிவமைக்கப்பட்டதே Apache's Lucene எனும் இயந்திரம் ஆகும். இது Java மொழியைக் கொண்டு எழுதப்பட்ட cross-platform திறன் கொண்ட ஒரு இயந்திரம். இதனை அடித்தளமாக வைத்துத்தான் இன்றைய 'ElasticSearch' உருவாக்கப்பட்டுள்ளது. Lucene-ல் காணப்பட்ட ஒருசில சிரமங்களைக் களைவதற்காக, இது வலிமைமிகு REST API-ஐப் பயன்படுத்துகிறது. இதன் மூலம் தரவுகள் அனைத்தும் index முறையில் கையாளப்படுகின்றன. எனவே தரவுகளை தேடுவதும், எடுப்பதும், சேமிப்பதும் சுலபமாகிறது. மேலும் இந்த Rest API-ஆனது Curl எனும் கட்டளையைப் பயன்படுத்தி நேரடியாக elastic search-வுடன் பேசுகிறது. இவ்வாறு பேசும்போது இது செலுத்தும் தகவல்களும், பெற்றுக்கொள்ளும் தகவல்களும் JSON வடிவத்தில் அமையும்.

ElasticSearch-ஆனது Lucene-ன் செயல்பாடுகளை இன்னும் அதிக அளவில் விரிவாக்கியுள்ளது. அதாவது சமீபத்திய தகவல்களின் அடிப்படையில் உடனுக்குடன் ஆய்வறிக்கை எடுக்கும் அளவிற்கு (Real-time Analysis with real-time data) இது மிகவும் துரிதமானது. எடுத்துக்காட்டுக்கு டுவிட்டரில் எத்தனை பேர் '#கதிராமங்கலம்' என்று பதிவிட்டுள்ளனர் என்பதனை அறிக்கையாக எடுத்துப்பார்த்தால், அதில் ஒரு சில

நிமிடத்திற்கு முன்னர் பதிவிட்டவர் கூட இடம் பெற்றிருப்பார். அந்த அளவுக்கு இதன் வேகம் மிகவும் துரிதமானது. ElasticSearch-ல் வடிவான வடிவற்ற தகவல்கள் அனைத்தும் ஒரு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிலையில், index-ன் அடிப்படையில் சேமிக்கப்படுகின்றன. எனவே பயனர்கள் கேட்கும் தகவல்களை இது நொடியில் எடுத்து வெளிப்படுத்தும். அதே போல இதனுள் செலுத்தப்படும் தகவல்களும் உடனுக்குடன் உள் சென்றுவிடும்.

## 3.1 ஒருசில அடிப்படைப் பதங்கள்

அடுத்தபடியாக ElasticSearch-ல் பயன்படுத்தும் ஒருசில அடிப்படையான சொற்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

### 3.1.1 Node

இதுதான் நமது கணினியில் elasticsearch-ஐ இயக்கிக்கொண்டிருக்கின்ற இடம் ஆகும். Cluster முறையில் பல்வேறு கணினிகள் இணைக்கப்பட்டு அவை அனைத்தும் தங்களுக்கென்று உள்ள node-ல் elasticsearch-ஐ இயக்கிக்கொண்டிருக்கும். ஒரு node-ல் ஏதோ கோளாறு ஏற்பட்டு, அது தன் செயல்பாட்டை நிறுத்திவிட்டால்கூட, மற்றொரு கணினியில் இயங்கிக்கொண்டிருக்கும் node-ஆனது செயல்பட்டு நமது வேலைக்குத் தடைகள் ஏதும் நிகழாமல் பார்த்துக்கொள்ளும். இவ்வகையாக பல்வேறு கணினிகளில் இயங்கிக்கொண்டிருக்கும் nodes-ஐ, அது செய்யும் வேலையைப் பொறுத்து கீழ்க்கண்ட 3 விதங்களில் பிரிக்கலாம். ஒவ்வொரு கணினியில் உள்ள node-ன் configurations-ம் ஒவ்வொரு வகையில் அமையும்.

Master Node:- இது cluster முறையில் இணைக்கப்பட்டுள்ள பல்வேறு கணினிகளில் உள்ள அனைத்து nodes-ஐயும் மேலாண்மை செய்கின்ற வேலையை மட்டும் செய்யும். தரவுகளை சேமித்தல், வேண்டிய தரவுகளைத் தேடி எடுத்துக் கொடுத்தல் போன்ற எந்த ஒரு வேலையையும் செய்யாது. அதாவது தான் பெற்றுக்கொள்கின்ற ஒரு வேலையை மற்ற data nodes-க்கு அனுப்பி செய்யச் சொல்லும். அவ்வளவுதான். ஒரு node-ஐ இவ்வகையில் செயல்பட வைக்க விரும்பினால் elasticsearch.yml எனும் கோப்பில் சென்று node.master = true , node.data=false என்று கொடுக்க வேண்டும்.

Data Node:- இது தரவுகளை சேமித்தல், வேண்டிய தரவுகளைத் தேடி எடுத்துக் கொடுத்தல் போன்ற அடிப்படை வேலைகளைச் செய்கிறது. ஒரு node-ஐ இவ்வகையில் செயல்பட வைக்க விரும்பினால் அதே கோப்பில் சென்று node.master = true , node.data=false என்று கொடுக்க வேண்டும்.

Routing node or load balancer node:- Master Node-தான் தன்னிடம் உள்ள வேலைகளை data node-க்கு அனுப்பும் என்று ஏற்கனவே பார்த்தோம். ஆனால் இப்படிப் பிரித்துக் கொடுப்பதும் ஒரு வேலைதானே. வேலைப்பளு அதிகமான நேரங்களில் இந்த வேலையைச் செய்வதற்குக் கூட Master-ஆனது Routing Node என்பதனைப் பயன்படுத்துகிறது. இந்த routing node-தான் வேலைப்பளுவை மொத்தமாகப் பெற்றுக்கொண்டு அதனைப் பிரித்து, data node-க்கு அனுப்பும் வேலையைச் செய்கிறது. ஒரு node-ஐ இவ்வகையில் செயல்பட வைக்க node.master = false , node.data=false என்று கொடுக்க வேண்டும்.

### 3.1.2 Shards

ஒவ்வொரு Node-லும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட 'shard' வசிக்கின்றன. இத்தகைய shards-தான் தரவுகளைத் தாங்கியிருக்கும் பற்பல பிரிவுகள் ஆகும். ஒவ்வொரு shard-ம் பற்பல segments-களில் தரவுகளை சேமித்துக்கொண்டே வரும். நாம் கொடுக்கும் தகவல்கள் அப்படியே சென்று இதில் சேமிக்கப்படாது. வாக்கியங்கள் வார்த்தைகளாகப் பிரிக்கப்பட்டு, அந்த வார்த்தைகளில் ஒரே மாதிரியானவை நீக்கப்பட்டு தனித்தனி வார்த்தைகளாக சேமிக்கப்படும். இதே முறையில்தான் எண்கள், குறியீடுகள், வடிவங்கள் போன்றவற்றையும் கையாளும். அதாவது "I Love Chennai" என்பது சேமிக்கப்பட்ட பின்னர், மீண்டும் "I Love London" என்றொரு வார்த்தை வருகிறதெனில், I Love என்பது தவிர்க்கப்பட்டு London என்பது மட்டுமே சேமிக்கப்படும். இவ்வகையான சேமிப்பு முறைக்கு 'Inverted Index' என்று பெயர். இதுதான் ஒரு வார்த்தை எந்தெந்த வார்த்தைகளுடன் தொடர்புடையது(term relevance), அது எத்தனை முறை இடம் பெற்றுள்ளது(term frequencies), எந்தெந்த இடங்களில் இடம்பெற்றுள்ளது(word proximity) என்பது போன்ற விவரங்களைப் பாதுகாத்து ஒரு கையேடு போன்று செயல்படும். இவ்வகையான 'Inverted Index' நிலையானது. சேமிக்கப்பட்டுள்ள தரவுகளில் எவ்வித மாற்றமும் செய்ய இயலாது. ஏனெனில் ஒரு இடத்தில் மாற்றினால், அது தொடர்புடைய பல்வேறு இடங்களில் சேமிக்கப்பட்டுள்ள வார்த்தைகளும் சேர்ந்து பாதிப்படையும்.

ஒரு node-ல் பல்வேறு shards உள்ளன என்று நாம் பார்த்தோம். இந்த node-ல் ஏதோ கோளாறு ஏற்பட்டு, அது தன் செயல்பட்டை நிறுத்திவிட்டால், இதன் அடிப்படையில் நிகழ்த்து கொண்டிருக்கும் அனைத்து விதமான செயல்பாடுகளும் நின்று விடும் அபாயம் உள்ளது. இதனைத் தவிர்ப்பதற்காக உள்ளதே Replica shards ஆகும். அதாவது Cluster முறையில் இணைக்கப்பட்ட பல்வேறு கணினிகளில் ஒன்றில் முதன்மையான Primary Shards உருவாக்கப்படும். பின்னர் அதன் வடிவமைப்பிலேயே மற்றொரு இயந்திரத்தில் ஒரு பிரதி எடுத்துவைக்கப்படும். இதுவே Replica Shards எனப்படும். எனவே முதன்மை இயந்திரத்தில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டால், மற்றொரு இயந்திரத்தில் உள்ள replica shards இயங்க ஆரம்பிக்கும். அவ்வாறே ஒவ்வொரு

இயந்திரத்தினுடைய பிரதிகளும் அடுத்தடுத்த இயந்திரங்களில் பாதுகாக்கப்படும். ஏதேனும் ஒன்று தன் செயல்பாட்டை நிறுத்தினால் கூட மற்றொன்று இயங்கி நமக்கு கைகொடுக்கும். இதுவே 'Failover Mechanism' என்று அழைக்கப்படும்.

### 3.1.3 Index

எந்த shard-ல் எந்தெந்த விவரங்கள் பொதிக்கப்பட்டுள்ளன, அவை ஒன்றுடன் ஒன்று எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன என்பது போன்ற விவரங்களை அளிப்பதற்கு index ஒரு மாபெரும் தளம் போன்று செயல்படும். ஒன்றுக்கும் மேற்பட்ட index செயல்பட்டு இத்தகைய தரவுகளைப் பராமரிக்கின்றன. பொதுவாக ஒரேமாதிரியான குணநலன்களைக் கொண்ட தரவுகள் அனைத்தும் ஒரு index-ன் கீழ் அமையும். மேலும் இவை பல்வேறு வகைகளில்(types) பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வகையின் கீழும் விவரங்களை அதனதன் பண்புகளின்(characteristics) அடிப்படையில் சேமிக்கும்.

அதாவது ElasticSearch-ல் பல்வேறு வகையான indices (plural of index) காணப்படும். ஒவ்வொரு index-ம் பல்வேறு types-ஐக் கொண்டிருக்கும். ஒவ்வொரு type-ம் documents-ஐ பல்வேறு வகையான Properties-ன் அடிப்படையில் சேமிக்கும். மற்றொரு வகையில் சொல்ல வேண்டுமானால் Elastic Search-ஐ Mysql-வுடன் ஒப்பிட்டு மேற்கண்ட அனைத்தையும் பின்வருமாறு புரிந்து கொள்ளலாம்.

Elastic Search = Mysql
Index = Database
Types = Tables
Properties = Columns
Documents = Rows

## 3.2 Curl கட்டளையின் மாதிரி வடிவம்

நாம் ஏற்கனவே கண்டது போல ElasticSearch-வுடன் பேசி அதனுள் விவரங்களைப் போடுவதற்கும், எடுப்பதற்கும், தேடுவதற்கும் RESTful API என்பது பயன்படுகிறது. இது command line-ல் curl எனும் கட்டளையைப் பயன்படுத்தி index-வுடன் நேரடியாகப் பேசுகிறது. இதன் மாதிரி வடிவம் பின்வருமாறு.

curl -X<verb> '<protocol>://<host>:<port>/<path>/<operation_name>?
<query_string>' -d '<body>'

verb : என்ன செய்ய வேண்டும் என்பதனைக் குறிக்கும் ஒரு வினைச்சொல்லை இது பெற்றிருக்கும். GET, POST, PUT, DELETE, HEAD ஆகிய மதிப்புகளில் ஏதேனும் ஒரு மதிப்பு இங்கு காணப்படும்.

protocol : இது http அல்லது https ஆகிய மதிப்புகளில் ஒன்றாக இருக்கும்.

host : இது 'localhost' என்றோ அல்லது cluster-ல் இயங்கிக்கொண்டிருக்கின்ற node-ன் IP முகவரியாகவோ இருக்கும்.

port : தற்போது elasticsearch இயங்கிக்கொண்டிருக்கின்ற port-ன் உடைய எண் ஆகும். பொதுவாக 9200 என்று இருக்கும்.

path : இது index,type போன்ற மதிப்பினைக் கொண்டிருக்கும்.

operation_name : என்ன வகையான செயல் செய்யப்போகிறோம் என்பது இங்கு காணப்படும். _search , _count போன்ற மதிப்புகளைக் கொண்டிருக்கும்.

query_string : இது கட்டாய மதிப்பு கிடையாது. விருப்பம் இருந்தால் ?pretty எனக் கொடுக்கலாம். இது தெளிவான வடிவில் தகவல்களை வெளிப்படுத்த உதவும்.

body : data என்பதைக் குறிக்கும் -d ஐத் தொடர்ந்து இப்பகுதி காணப்படும். நமது விருப்பத்திற்கு ஏற்றார் போன்ற தகவல்களைப் பெறுவதற்கு இப்பகுதியில் தான் கூடுதல் விவரங்கள் அளிக்கப்படும்.

### 3.2.1 எடுத்துக்காட்டு 1

பின்வரும் கட்டளை localhost-னுடைய port எண் 9200-ல் எது இயங்கிக்கொண்டிருக்கிறதோ அதனுடைய விவரங்களைப் பெற்று json வடிவில் வெளிப்படுத்தும். பொதுவாக 9200-ல் ElasticSearch இயங்கிக்கொண்டிருப்பதால் அதனுடைய மதிப்பு இங்கு வெளிப்பட்டுள்ளது.

```
curl -XGET 'http://localhost:9200/?pretty'
```

வெளியீடு:

```
{
  "name" : "GfZBwlm",
  "cluster_name" : "elasticsearch",
  "cluster_uuid" : "Ux_Fc9t6Tzin5hh06NhbYA",
  "version" : {
    "number" : "5.5.1",
    "build_hash" : "19c13d0",
    "build_date" : "2017-07-18T20:44:24.823Z",
    "build_snapshot" : false,
    "lucene_version" : "6.6.0"
  },
  "tagline" : "You Know, for Search"
}
```

### 3.2.2 எடுத்துக்காட்டு 2

இது கொடுக்கப்பட்டுள்ள port-ல் இயங்கிக்கொண்டிருக்கும் elasticsearch அமைந்துள்ள cluster பற்றிய விவரங்களை அளிக்கிறது. Cluster-ன் பெயர், அதன் நிலை, அதிலுள்ள nodes, shards என்று அனைத்து விவரங்களையும் வெளிப்படுத்தும்.

Cluster முறையில் இணைக்கப்பட்ட கணினிகளில் உள்ள nodes, shards ஆகியவை தயார் நிலையில் உள்ளதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வதற்கு health உதவும். இது தன்னுடைய நிலையினை பின்வரும் 3 மதிப்புகளில் வெளிப்படுத்தும்.

• Red என வெளிப்படுத்தினால் "ஒருசில முதன்மை shards தயாராக இல்லை" என்று அர்த்தம்.
• Yellow என வெளிப்படுத்தினால் "முதன்மை shards அனைத்தும் தயாராக உள்ளது, ஒருசில replica shards-தான் தயாராக இல்லை" என்று அர்த்தம். பொதுவாக ஒரே ஒரு கணினியில் இயங்கிக்கொண்டிருக்கும் elasticsearch இந்நிலையினை வெளிப்படுத்தும். ஏனெனில் அதற்கு replica என்ற ஒன்று கிடையாது.
• Green என வெளிப்படுத்தினால் "முதன்மை Replica ஆகிய அனைத்தும் தயாராக உள்ளது" என்று அர்த்தம்.

```
curl -XGET 'http://localhost:9200/_cluster/health?pretty=true'
```

வெளியீடு:

```
{
  "cluster_name" : "elasticsearch",
  "status" : "yellow",
  "timed_out" : false,
  "number_of_nodes" : 1,
  "number_of_data_nodes" : 1,
  "active_primary_shards" : 6,
  "active_shards" : 6,
  "relocating_shards" : 0,
  "initializing_shards" : 0,
  "unassigned_shards" : 6,
  "delayed_unassigned_shards" : 0,
  "number_of_pending_tasks" : 0,
  "number_of_in_flight_fetch" : 0,
  "task_max_waiting_in_queue_millis" : 0,
  "active_shards_percent_as_number" : 50.0
}
```

Cluster-ன் நிலையினைத் தெரிந்து கொண்டதுபோல shards, index ஆகிய அனைத்தின் நிலையினையும் health மூலம் தெரிந்து கொள்ளலாம். அதற்கான கட்டளைகள் பின்வருமாறு.

```
curl -XGET 'http://localhost:9200/_cluster/health?level=cluster
curl -XGET 'http://localhost:9200/_cluster/health?level=shards
curl -XGET 'http://localhost:9200/_cluster/health?level=indices
```

### 3.2.3 எடுத்துக்காட்டு 3

இது கொடுக்கப்பட்டுள்ள port-ல் இயங்கிக்கொண்டிருக்கும் அனைத்து index- ஐயும் பட்டியலிடும். ?v என்பது தலைப்புடன் சேர்த்து வெளியிடும். ?v தரவில்லையெனில் தலைப்புகள் வெளிவராது.

```
curl 'localhost:9200/_cat/indices?v'
```

வெளியீடு:

```
health status index    uuid          pri rep docs.count docs.deleted
store.size pri.store.size
yellow open  interviews  EU-BIHTrSgmoScvHsNGXzA  5  1     4      0   25.7kb
25.7kb
yellow open  bookdb_index TeMyXrZeT8iMsQjoVxBqwQ  1  1     4      0
27.5kb     27.5kb
```

### 3.2.4 எடுத்துக்காட்டு 4

இப்போது ஒரு புது index-ஐ உருவாக்கி அதனுள் எவ்வாறு தகவல்களை உட்செலுத்துவது என்று பார்க்கலாம்.பின்வரும் கட்டளை elasticsearch இயங்கிக்கொண்டிருக்கும் இடத்தில் 'interviews' எனும் பெயர் கொண்ட index-ஐ உருவாக்கி அதில் 'candidates'எனும் வகையின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை உட்செலுத்துகிறது.

-d ஐத் தொடர்ந்து single quotes-க்குள் {பண்பு:தரவு} (property:data) எனும் முறையில் விவரங்களை அமைக்க வேண்டும் .

```
curl -XPOST 'http://localhost:9200/interviews/candidates' -d '
{
"Name" : "Nandhini",
"DOB" : "1988-10-04",
"Experience": 7,
"Organizations_worked" : ["Polaris", "Virtusa","Infosys"],
"Skillset": "Ruby, Python, Pearl, ETL Testing",
"Feedback":"Strong in Testing, Expert in SQL, Beginner in Python"
}'
```

இதன் வெளியீடு பின்வருமாறு அமைந்தால் தரவுகள் வெற்றிகரமாக உட்சென்றுவிட்டன என்று அர்த்தம்.

```
{"_index":"interviews","_type":"candidates","_id":"AV2n8sn4DfKljeJYHE0Y","_
version":1,"result":
"created","_shards":{"total":2,"successful":1,"failed":0},"created":true}
```

மேற்கூறிய அதே முறையில் பின்வரும் தரவுகளையும் ஒவ்வொன்றாக உட்செலுத்தி விடவும்.

"Name" : "Ruby Jackson",
"DOB" : "1983-05-23",
"Experience": 10,
"Organizations_worked" : ["Virtusa", "TVS Lucas","Tech Mahindra"],
"Skillset": "DW Testing, Expert systems, Java","Feedback":"Beginner in Selenium, Knows Java and ETL"

"Name" : "Narayani",
"DOB" : "1995-11-14",
"Experience": 2,
"Organizations_worked" : ["Aspire Systems"],
"Skillset": "Big Data, ELK Stack",
"Feedback":"Expertise in Big Data, Beginner in ELK"

"Name" : "N.T.Madhuri",
"DOB" : "1990-05-30",
"Experience": 4,
"Organizations_worked" : ["Thoughtworks", "Virtusa"],
"Skillset": "Unix, Linux",
"Feedback":"Strong knowledge in Unix & Linux"

இப்போது நந்தினி, ரூபி ஜாக்சன், நாராயாணி, N.T.மாதுரி ஆகியோரின் பெயர், பிறந்த தேதி, எத்தனை வருட அனுபவமுடையவர்கள், அவர்கள் வேலை செய்த நிறுவனங்களின் விவரம், எந்தெந்த தொழில்நுட்பங்களில் திறன் மிக்கவர்கள் மற்றும் அவர்களை நேர்காணல் செய்தவர்கள் கொடுத்த பின்னொட்டம் ஆகியவை elasticsearch-க்குள் செலுத்தப்பட்டுவிட்டன.

இப்போது இவற்றை வைத்து எந்தெந்த வகையில் நமக்கு வேண்டிய தரவுகளை மட்டும் தேடுவது, எடுப்பது, அதற்குக் கட்டளைகளை எவ்வாறெல்லாம் அமைப்பது போன்றவை பற்றி இனி பார்க்கப்போகிறோம்.

### 3.2.5 எடுத்துக்காட்டு 5

நாம் உருவாக்கிய index-ல் உள்ள அனைத்து தரவுகளையும் தேடி எடுப்பதற்கான கட்டளை பின்வருமாறு அமையும். மேற்கண்டது போன்றே கட்டளையை அமைத்து கடைசியாக _search எனக் கொடுத்தால், அது கொடுக்கப்பட்ட index/type-ல் உள்ள அனைத்துத் தரவுகளையும் எடுத்து வெளிப்படுத்தும்.

```
curl -XGET 'http://localhost:9200/interviews/candidates/_search?pretty'
```

வெளியீடு:


```
{
  "took" : 5,
  "timed_out" : false,
  "_shards" : {
    "total" : 5,
    "successful" : 5,
    "failed" : 0
  },

  "hits" : {
 "total" : 4,
 "max_score" : 1.0,
 "hits" : [
 {
 "_index" : "interviews",
 "_type" : "candidates",
 "_id" : "AV2nkI0pDfKljeJYHE0U",
 "_score" : 1.0,
 "_source" : {
 "Name" : "Narayani",
 "DOB" : "1995-11-14",
 "Experience" : 2,
 "Organizations_worked" : [
 "Aspire Systems"
 ],
 "Skillset" : "Big Data, ELK Stack",
 "Feedback" : "Expertise in Big Data, Beginner in ELK"
 }
```

```
},
{
"_index" : "interviews",
"_type" : "candidates",
"_id" : "AV2neRCiDfKljeJYHE0O",
"_score" : 1.0,
"_source" : {
"Name" : "N.T.Madhuri",
"DOB" : "1990-05-30",
"Experience" : 4,
         "Organizations_worked" : [
           "Thoughtworks",
           "Virtusa"
         ],
         "Skillset" : "Unix, Linux",
         "Feedback" : "Strong knowledge in Unix & Linux"
       }
     },
     {
       "_index" : "interviews",
       "_type" : "candidates",
       "_id" : "AV2nkG8DDfKljeJYHE0T",
       "_score" : 1.0,
       "_source" : {
         "Name" : "Ruby Jackson",
         "DOB" : "1983-05-23",
         "Experience" : 10,
         "Organizations_worked" : [
           "Virtusa",
           "TVS Lucas",
           "Tech Mahindra"
         ],
         "Skillset" : "DW Testing, Expert systems, Java",
         "Feedback" : "Beginner in Selenium, Knows Java and ETL"
       }
     },
     {
       "_index" : "interviews",
       "_type" : "candidates",
       "_id" : "AV2n8sn4DfKljeJYHE0Y",
       "_score" : 1.0,
       "_source" : {
         "Name" : "Nandhini",
         "DOB" : "1988-10-04",
         "Experience" : 7,
```

```
          "Organizations_worked" : [
            "Polaris",
            "Virtusa",
            "Infosys"
          ],

          "Skillset" : "Ruby, Python, Pearl, ETL Testing",
          "Feedback" : "Strong in Testing, Expert in SQL, Beginner in
Python"
        }
      }
    ]
  }
}
```

இங்கு தரவுகளுக்கான ஒவ்வொரு தொகுப்பும் தனித்தனி id-யுடன் விளங்குவதைக் காணவும். இந்த id-தான் பின்னாளில் இத்தரவுகளை அழிக்கவோ மாற்றம் செய்யவோ பயன்படும்.

### 3.2.6 எடுத்துக்காட்டு 6

ஒரு குறிப்பிட்ட id-ஐக் கொண்ட தரவுகளை அழிப்பதற்கான கட்டளை பின்வருமாறு அமையும். இதில் 'AV2nkFPQDfKljeJYHE0S' என்பதுதான் id ஆகும்.

```
curl -XDELETE
'http://localhost:9200/interviews/candidates/AV2nkFPQDfKljeJYHE0S'
```

இதன் வெளியீடு பின்வருமாறு அமைந்தால் தரவுகள் வெற்றிகரமாக நீக்கப்பட்டுவிட்டன என்று அர்த்தம்.

```
{"found":true,"_index":"interviews","_type":"candidates","_id":"AV2nkFPQDfK
ljeJYHE0S","_version":2,"result":"deleted","_shards":
{"total":2,"successful":1,"failed":0}}
```

### 3.2.7 எடுத்துக்காட்டு 7

இப்போது ஒருவர் நாம் மேலே உட்செலுத்திய விவரங்களின் அடிப்படையில் தனக்கு வேண்டிய தேடலைத் தொடங்குகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் Ruby எனும் மொழி தெரிந்தவர்களின் தொகுப்புகளைப் பெறுவதற்காக _search ஐத் தொடர்ந்து q=Ruby எனப் பின்வருமாறு கொடுத்துள்ளார்.

```
curl -XGET 'http://localhost:9200/interviews/candidates/_search?
q=Ruby&pretty'
```

ஆனால் இதுவோ Ruby மொழி தெரிந்த நந்தினியின் தரவுகளை வெளியிடுவதோடு நிறுத்தாமல், ரூபி எனும் பெயர் கொண்டவரின் தகவலையும் சேர்த்து வெளியிட்டுள்ளது.

வெளியீடு:


```
{

  "took" : 37,
  "timed_out" : false,
  "_shards" : {
    "total" : 5,
    "successful" : 5,
    "failed" : 0
  },

  "hits" : {
    "total" : 2,
    "max_score" : 0.26228312,
  "hits" : [
      {
        "_index" : "interviews",
        "_type" : "candidates",
        "_id" : "AV2nkG8DDfKljeJYHE0T",
        "_score" : 0.26228312,
        "_source" : {
          "Name" : "Ruby Jackson",
          "DOB" : "1983-05-23",
```

```
          "Experience" : 10,
          "Organizations_worked" : [
            "Virtusa",
            "TVS Lucas",
            "Tech Mahindra"
          ],
          "Skillset" : "DW Testing, Expert systems, Java",
          "Feedback" : "Beginner in Selenium, Knows Java and ETL"
        }
      },
      {
        "_index" : "interviews",
        "_type" : "candidates",
        "_id" : "AV2n8sn4DfKljeJYHE0Y",
        "_score" : 0.2568969,
        "_source" : {
          "Name" : "Nandhini",
          "DOB" : "1988-10-04",
          "Experience" : 7,
          "Organizations_worked" : [
            "Polaris",
            "Virtusa",
            "Infosys"
          ],
          "Skillset" : "Ruby, Python, Pearl, ETL Testing",
          "Feedback" : "Strong in Testing, Expert in SQL, Beginner in Python"
        }
      }
    ]
  }
}
```

இதுபோன்ற குழப்பங்களைத் தவிர்க்க நாம் கொடுக்கின்ற வார்த்தையை எந்தப் பண்பின்கீழ் தேட வேண்டும் எனவும் குறிப்பிட்டுக் கூற வேண்டும்.

### 3.2.8 எடுத்துக்காட்டு 8

Ruby எனும் வார்த்தையை skillset எனும் பண்பின்கீழ் தேடி அதில் பொருந்துபவர்களை மட்டும் வெளியிடுக என்று கூறுவதற்கான கட்டளை பின்வருமாறு அமையும்.

```
curl -XGET 'http://localhost:9200/interviews/candidates/_search?
q=Skillset:Ruby&pretty'
```

### 3.2.9 எடுத்துக்காட்டு 9

மேற்கண்ட அதே கட்டளையை DSL (Domain Specific Language) மொழி கொண்டு பின்வருமாறு எழுதலாம்.

```
curl -XPOST 'http://localhost:9200/interviews/candidates/_search?pretty' -d
'


{
 "query" : {
 "match" : {
 "Skillset" : "Ruby"


         }
     }
 }'
```

அதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விதிமுறைகளை இணைத்து நமது தேடுதலைக் குறுக்குவதற்கு இம்மொழி மிகவும் உதவுகிறது. இங்கு நாம் கண்டது ஒரே ஒரு பண்பில் மட்டும் வார்த்தையைத் தேடுகின்ற அடிப்படை 'match query' ஆகும். இனிவரும் கட்டளைகளில் இதன் பல்வேறு அம்சங்களைக் காணலாம்.

### 3.2.10 எடுத்துக்காட்டு 10

ஒன்றுக்கும் மேற்பட்ட பண்புகளில் வார்த்தையைத் தேடுகின்ற 'multi_match query' பின்வருமாறு அமையும். இங்கு Expert எனும் வார்த்தை "Skillset"-ல் காணப்பட்டாலோ அல்லது "Feedback"-ல் காணப்பட்டாலோ அத்தரவுத் தொகுப்பு வெளிப்படும்.

```
curl -XPOST 'http://localhost:9200/interviews/candidates/_search?pretty' -d
'

{
     "query" : {
         "multi_match" : {
             "query" : "Expert",
             "fields": ["Skillset","Feedback"]
         }
     }
 }'
```

### 3.2.11 எடுத்துக்காட்டு 11

இங்கு multi_match query-ல் உள்ள fuzziness எனும் பண்பினைப் பற்றிக் காணலாம். இது நமது தேடு வார்த்தையில் உள்ள எழுத்துப் பிழைகளை நீக்க உதவுகிறது. தவறுதலாக Expertis என்று கொடுத்தாலும் சரியான Expertise எனும் வார்த்தையை எடுத்துக்கொண்டு தேடுகிறது.

```
curl -XPOST 'http://localhost:9200/interviews/candidates/_search?pretty' -d
'

{
     "query" : {
         "multi_match" : {
             "query" : "Expertis",
             "fields": ["Skillset","Feedback"],
             "fuzziness": "AUTO"
         }
     }
 }'
```

### 3.2.12 எடுத்துக்காட்டு 12

must, should, must_not மூலம் விதிமுறைகளை இணைத்து நமது தேடுதலை இன்னும் சிறப்பாகக் குறுக்குவதற்கு 'bool query' பயன்படுகிறது. இவை முறையே AND, OR, NOT போன்றவற்றிற்கு மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பின்வரும் bool query-ல் உட்புறமும் வெளிப்புறமுமாக இரண்டு bools பயன்படுத்தப்பட்டுள்ளன. உட்புற bool-ல் ஒருவருடைய skillset-ஆனது 'ETL Testing' அல்லது 'DW Testing'-ஆக இருக்க வேண்டும் என்பதற்காக அவை should-க்குள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பொருத்தத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர் virtusa-நிறுவனத்தில் பணிபுரிந்தவராகவும் polaris-ல் பணிபுரியாதவராகவும் இருக்க வேண்டும் என்பதற்காக அவைகள் முறையே must மற்றும் must_not பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் பொருந்துகின்ற ஒருவரைத் தேர்வு செய்வதற்காக வெளிப்புற bool உருவாக்கப்பட்டு அனைத்து விதிமுறைகளையும் இணைக்கிறது.

```
curl -XPOST 'http://localhost:9200/interviews/candidates/_search?pretty' -d
'


{
 "query": {
 "bool": {


            "must": {
                "bool" : { "should": [
                      { "match": { "Skillset": "ETL Testing" }},
                      { "match": { "Skillset": "DW Testing" }} ] }
            },
            "must": { "match": { "Organizations_worked": "Virtusa" }},
            "must_not": { "match": {"Organizations_worked": "Polaris" }}
        }
    }
}'
```

# 4 Logstash

Logstash என்பது நிகழ்வுகளைப் பெற உதவும் ஒரு தரவுக் குழாய் (data pipeline) ஆகும். இது ரூபி மொழியில் எழுதப்பட்ட பல்வேறு வகையான செருகு நிரல்களை (plugins) வைத்து இயங்குகிறது. எனவே தான் இது "Plugin based events processing data pipeline" என்று அழைக்கப்படுகிறது. இந்த தரவுக் குழாய் 3 வகையான நிலைகளில் தரவுகளைக் கையாள்கிறது. இது பின்வருமாறு:Logstash என்பது நிகழ்வுகளைப் பெற உதவும் ஒரு தரவுக் குழாய் (data pipeline) ஆகும். இது ரூபி மொழியில் எழுதப்பட்ட பல்வேறு வகையான செருகு நிரல்களை(plugins) வைத்து இயங்குகிறது. எனவே தான் இது "Plugin based events processing data pipeline" என்று அழைக்கப்படுகிறது. இந்த தரவுக் குழாய் 3 வகையான நிலைகளில் தரவுகளைக் கையாள்கிறது. இது பின்வருமாறு:




முதலில் பல்வேறுபட்ட மூலங்களிலிருந்து (different sources) வரும் நிகழ்ச்சிகளை(events) Logstash என்பது பெற்றுக்கொள்ளும். இதன் பெயர் வேண்டுமானால் LogStash என்று இருக்கலாம். அதற்காக இது logs-ஐ மட்டும் பெற்றுக்கொள்ளும் கருவி என்று கிடையாது. Files, sockets, script outputs போன்ற பல்வேறுபட்ட வடிவங்களில் வரும் அனைத்து நிலைத் தரவுகளையும் பெற்றுக்கொள்ளும். இவ்வாறு வேறுபட்ட மூலங்களிலிருந்து வரும் நிகழ்வுகளை எடுப்பதற்கு வெவ்வேறு வகையான செருகு நிரல்கள் logstash - வுடன் இணைந்து செயல்படுகின்றன. இவை உள்ளீட்டுக்கான செருகு நிரல்கள் (Input plugins) என்று அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டுக்கு file, irc, jdbc, kafka, github exec, eventlog, http, imap போன்றவை files, servers, webhooks, message queues,

shell command outputs போன்ற பல்வேறுபட்ட மூலங்களிலிருந்து நிகழ்ச்சிகளை எடுக்க உதவுகின்றன. நிகழ்ச்சி என்று நான் குறிப்பிடுவது அதிலுள்ள தகவல்களை மட்டுமே! இதுவே முதல் நிலை ஆகும். அடுத்ததாக இவ்வாறு பெற்றுக்கொண்ட தகவல்களை நமக்குத் தேவைப்படுகின்ற விதங்களில் மாற்றி (data Processing) வடிவமைக்கின்றன. இந்நிலையில்தான் எதன் அடிப்படையில் தகவல்கள் பிரிக்கப்பட வேண்டும், எவை மாற்றப்பட வேண்டும், எவை நீக்கப்பட வேண்டும் போன்ற தகவல்களெல்லாம் கொடுக்கப்படுகின்றன. இதுவே இரண்டாம் நிலை.கடைசியாக வடிவமைக்கப்பட்ட தரவுகளை பல்வேறுபட்ட சேமிப்புக் கிடங்குகளில் கொண்டு சேர்க்கின்றன(destination). அவ்வாறு கொண்டு சேர்ப்பதற்கு பல்வேறு செருகு நிரல்கள் உள்ளன. இவை வெளியீட்டுக்கான செருகு நிரல்கள் (Output plugins) என்று அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டுக்கு csv, datalog, email, irc, jira, exec, kafka, elasticsearch போன்றவை files, servers, message queues, storage engine, databases போன்ற பல்வேறுபட்ட கடைநிலை சேருமிடங்களில் கொண்டு சேர்க்கின்றன. இதுவே மூன்றாம் நிலை.இப்போது இவை அனைத்தையும் எவ்வாறு செயல்வடிவில் செய்வது என்று காணலாம்.

## 4.1 ஒரு கோப்பிலிருந்து தரவுகளை உள்ளெடுத்தல்

earthquakes எனும் csv கோப்பில் இருக்கும் அனைத்துத் தகவல்களையும் எவ்வாறு logstash-க்குள் செலுத்துவது, பின்னர் அதனை எவ்வாறு வடிவமைப்பது, கடைசியாக elasticsearch எனும் search engine-க்குள் எவ்வாறு கொண்டு சேர்ப்பது என்று பார்க்கப்போகிறோம். இவை அனைத்தையும் செய்வதற்கு நாம் ஏதேனும் ஒரு பெயரைத் தொடர்ந்து .conf எனும் கோப்பினை உருவாக்கி அதில் பின்வருமாறு நிரல்களை எழுத வேண்டும்.

### 4.1.1 Config File

இங்கு earthquakes.conf எனும் பெயரில் நான் கோப்பினை உருவாக்கியுள்ளேன்.

```
input {
 file {
 path => ["/home/ubuntu/earthquakes.txt"]
 type => "eqs"
 start_position => "beginning"
```

```
 }
}

filter {

csv {
 separator => ","
 columns =>
["DateTime","Latitude","Longitude","Depth","Magnitude","MagType","NbStation
s","Gap","Distance","RMS","Source","EventID"]
 }
 mutate {convert => ["Latitude", "float"]}
 mutate {convert => ["Longitude", "float"]}
 mutate {convert => ["Depth", "float"]}
 mutate {convert => ["Magnitude", "float"]}
 mutate {convert => ["MagType", "float"]}
}

output {

    elasticsearch {
        action => "index"
        hosts => ["localhost:9200"]
        index => "earthquakes"
        workers => 1
    }

    stdout {}

}
```

இங்கு input{}, filter{}, outout{} எனும் functions, logstash-ல் உள்ள 3 நிலைகளில் நடத்தப்பட வேண்டிய வேலையைச் செய்கின்றன.

Input {}

இங்கு logstash-ஆனது csv கோப்பிலிருந்து தகவல்களைப் பெறவிருப்பதால் file எனும் உள்ளீட்டுக்கான செருகு நிரலைப் பயன்படுத்தியுள்ளது. அதன் path, type, start_position எனும் 3 parameters இதன் வேலையைச் சுலபமாக்குகின்றன.

- path என்பது கோப்பு இருக்கின்ற இடத்தின் பாதையை குறிக்கிறது.
- type என்பது நாம் வழங்கியுள்ள eqs என்பதனை தன் மதிப்பாகப் பெற்றுள்ளது. இதுவே நாம் பின்னர் தரவுகளை தேடுவதற்கும் எடுப்பதற்கும் உதவும் ஒரு அடிப்படை மதிப்பாக அமையும்.
- start_position என்பது beginning / end எனும் இரண்டு மதிப்புகளில் ஒன்றினைப் பெற்று விளங்கும். சமீபத்திய தகவல்களிலிருந்து துவங்க விரும்பினால் end எனவும், பழமையான தகவல்களிலிருந்து துவங்க விரும்பினால் begining எனவும் கொடுக்கலாம்.
- இவற்றின் அடிப்படையில் logstash-ஆனது தரவுகளை உள் எடுக்க ஆரம்பிக்கும்.

Filter {}

இது நமக்கு வேண்டிய வடிவங்களில் உள்ளெடுக்கப்பட்ட தரவுகளைப்பொருள்படும்படிப் பிரித்து நேர்த்தியாக வடிவமைக்கப்படுகிறது. எந்தவகையான மூலத்திலிருந்து தரவுகளைப் பெறுகின்றோமோ அதற்கேற்றார் போன்ற filter plugin பயன்படுத்தப்படும். இங்கு நாம் csv கோப்பிலிருந்துதகவல்களைப் பெற்றுள்ளதால் csv { } filter-ஐப் பயன்படுத்தியுள்ளோம்.இதேபோன்று பிற வடிவிலான தரவுகளுக்காக json { }, xml { } போன்ற வகையான filters-ம் உள்ளன.

- csv-ன் separator எனும் பண்பானது, கோப்பில் உள்ள comma-வின் அடிப்படையில் தரவுகள் பிரிக்கப்பட வேண்டும் என்பதைக்குறிக்கின்றது.
- columns எனும் பண்பின் மதிப்புகளாக இடம்பெற்றுள்ள fields மட்டுமே வெளியீட்டினுள் செலுத்தப்படும். அதாவது இதில்பட்டியலிடப்பட்டுள்ள fields மட்டும்தான் ES-க்குள் செல்லும்.
- convert மூலம் இவை அனைத்தும் float எனும் தரவகைக்குமாற்றப்படுகின்றன. ஏனெனில் Kibana வரைபடம் வரைவதற்கு இந்தத் தரவு வகைதான் பொருத்தமானதாக அமையும். இதுபோன்ற மாற்றங்கள் அனைத்தும் mutate { } எனும் filter-க்குள் கொடுக்கப்படவேண்டும்.
- mutate { }- ஆனது convert, copy, rename, replace, update, lowercase போன்ற வகையான மாற்றங்களை நிகழ்த்த உதவும் filter ஆகும்.

Output {}

கடைசியாக தகவல்களை ES-க்குள் செலுத்த வேண்டும் என்பதற்காக அதற்கான elasticsearch { } எனும் plugin-ஐப் பயன்படுத்தியுள்ளோம். அதன் action, hosts, index, workers எனும் 4 parameters இதற்கு உதவியுள்ளது.

- action என்பது எப்போதும் 'index' எனும் மற்றொரு parameter-ஐ அதன் மதிப்பாகப் பெற்றிருக்கும். இதற்கு delete எனும் மற்றொரு மதிப்பிணையும் வழங்கலாம். index என்பது ஒரு database-ஐ உருவாக்குவதற்கும், delete என்பது ஏற்கனவே இருக்கும் ஒன்றை ஆழிப்பதற்கும் பயன்படும்.
- hosts என்பது எங்கு உருவாக்க வேண்டும் என்பதனைக் குறிக்கிறது. இது elasticsearch இயங்கிக்கொண்டிருக்கும் hostname அல்லது IP முகவரியைக் கொண்டிருக்கும்.
- index என்பது earthquakes எனும் பெயர் கொண்ட ஒரு database-ஐ உருவாக்கியுள்ளது. ஒவ்வொரு நாளும் இப்பெயரின் தொடர்ச்சியில் அந்நாளின் தேதியிட்டு தரவுகளை செலுத்திக்கொண்டே செல்லும். "earthquakes" எனும் பெயர் கொண்ட index என்பது ஒரு database போன்று செயல்படும். Input plugin-ல் உள்ள eqs எனும் பெயர் கொண்ட type என்பது அதிலுள்ள tables போன்று செயல்படும். ஒரு index-ல் எத்தனை type வேண்டுமானாலும் செலுத்தலாம். தற்போதைக்கு earthquakes-ல் உள்ள ஒரே type, 'eqs' ஆகும்.
- கடைசியாக stdout{ } எனும் plugin-ஐப் பயன்படுத்தி console-லிலும் அவற்றை வெளியிடுமாறு கொடுத்துள்ளோம்.

### 4.1.2 கட்டளை

```
sudo /usr/share/logstash/bin/logstash -f earthquakes.conf
```

எனும் கட்டளை earthquakes கோப்பில் உள்ள அனைத்து நிகழ்வுகளையும் வேண்டிய மாற்றம் செய்து ElasticSearch Engine-க்குள் செலுத்தி விடும்.

## 4.2 Twitter போன்ற நிகழ்கால தரவுகளை உள்ளெடுத்தல்

இதன் Configuration file பின்வருமாறு. இதை இப்போது தங்களாலேயே புரிந்து கொள்ள முடியும். "#Ganesh Chathurthi" என்று tweet செய்தவர்களை எடுத்து logstash வழியே Elastic Search-க்குள் செலுத்தியுள்ளேன். twitter { } -க்கான input plugin இங்கு பயன்படுத்தப்பட்டு வேண்டிய தகவல்கள் உள்ளெடுக்கப்பட்டுள்ளன. அவை எவ்வித மாற்றமும் செய்யப்படாமல், 'twitter_elastic_example' எனும் index பெயரில் elastic search-க்குள் செலுத்தப்பட்டுள்ளன.

```
Input {
 twitter {
 consumer_key => "Mn4O9nBwKIwVfdsgNf8gqs546"
 consumer_secret => "Bgm7io78g0Ks7n1WAbF4oPAKXaLWAw3Ahj4ft47k6ooTNsRIIJ"
 oauth_token => "44962404-v7EXtrfc8ZTqWosyPhoPDM5w5qBAefSQfHOklLQeL"
 oauth_token_secret => "zosREB0kdInNbE03RMurjWkdyejsTmqtPOXlF2YHxzVqV"
 keywords => ["Ganesh Chathurthi"]
          full_tweet => true
     }
    }

filter { }

output {
stdout {
    codec => rubydebug
}

  elasticsearch {
      hosts => "localhost:9200"
      index         => "twitter_elastic_example"
      document_type => "tweets"
      template      => "/etc/logstash/conf.d/twitter-template.json"
      template_name => "twitter_elastic_example"
      template_overwrite => true
  }
}
```

# 5 Kibana

Kibana என்பதுElasticSearch-ல் இருக்கும் தரவுகளை வரைபடங்களாக மாற்றி வெளிப்படுத்தஉதவும் ஒரு Visual Interface ஆகும். ElasticSearch-ல் இருக்கும் தரவுகளை வைத்து ஒருசில முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு Kibana-வின் வரைபடங்கள் உதவுகின்றன. இதனை அறிக்கைக்கான கருவி (ReportingTool) என்றும் கூறலாம். அதாவது வெறும் எண்ணிக்கையினாலான தகவல்களை மட்டும்வைத்துக்கொண்டு ஒருசில முக்கிய முடிவுகளை எடுப்பது என்பது சற்று கடினமானவிஷயம். எனவேதான் Kibana-வானது அவற்றை அழகிய வரைபடங்களாக மாற்றி, அதனைப் பார்க்கும் போதே தரவுகளின் சாராம்சங்களைப் புரிந்து கொள்ளக் கூடியஅளவுக்கு சுலபமான வகையில் வெளிப்படுத்துகிறது. இத்தகைய வரைபடங்களைவைத்துக்கொண்டு நாம் எளிதில் அனைத்தையும் புரிந்து கொள்ள முடியும்.Microsoft Excel-ல் உள்ள graphs மற்றும் Reporting-காகவே வடிவமைக்கப்பட்டஇன்னபிற கருவிகள்கூட இவ்வேலையைத்தான் செய்யும் என்றாலும், அவைகளால் அதிகபட்சம் ஒரு மில்லியன் வரைதான் தரவுகளைத் தாங்க முடியும். அதற்கும் மேலாகதரவுகள் வரும்போது அவை படுத்துவிடும். ஆனால் Kibana-வோ சிறப்பாகசெயல்படும். அதிக எண்ணிக்கையிலான தரவுகளையும் வரைபடங்களாக மாற்றுவதற்குKibana-வே சிறப்பாக அமைகிறது.

இது உலாவியில் இயங்கக்கூடிய கருவி ஆகும். பொதுவாக 5601 எனும் Port எண்ணில் இயங்கிக் கொண்டிருக்கும். இதில் Management, Discover, Visualize, Dashboard ஆகிய முக்கியப் பகுதிகள் உள்ளன. இவை ஒவ்வொன்றின் செயல்பாடுகளைப் பற்றியும் பின்வருமாறு காணலாம்.



## 5.1 Management

Kibana உலாவியில் இயங்கத் தொடங்கியவுடன் இப்பகுதிதான் default-ஆக வந்து அமையும். இதுவே ES-ல் உள்ள index-ஐ kibana-க்குள் ஏற்றம் செய்தல், ஏற்றம் செய்த index-ஐ kibana-விலிருந்து நீக்குதல், வரைபடங்களாக சேமிக்கப்பட்டவற்றைப் பட்டியலிடுதல் மற்றும் அவைகளில் தேவையில்லாதவற்றை நீக்குதல் போன்ற அனைத்து விதமான "ஆக்கல், அழித்தல், நிர்வகித்தல்" போன்ற வேலைகளைச் செய்கிறது. இதில் உள்ள 'Index Pattern' என்பதன் மீது சொடுக்கினால் 'Configure an Index Pattern' எனும் பக்கம் வெளிப்படும்.




ES– க்குள் தற்போது interviews, earthquakes, twitter_elastic_example ஆகிய 3 indices உள்ளன. இவை அனைத்தையும் kibana-க்குள் ஏற்றம் செய்வதற்கான படிகள் பின்வருமாறு அமையும்.

1. Index name or pattern எனக் கேட்கும் பெட்டியில் interviews -எனக் கொடுக்கவும். இதையடுத்து தானாகவே இதில் உள்ள DOB எனும் field கீழிறக்கப் பெட்டியிலிருந்து தேர்வு செய்யப்படுவதைக் காணலாம்.




2. பொதுவாக kibana-க்குள் ஏற்றம் செய்யப்படும் நிகழ்வுகள் அனைத்தும் காலநேர அடிப்படையில்தான் காட்சிப்படுத்தப்படுகின்றன. எனவே நமது index-ல் காலநேர மதிப்பினைப் பெற்று விளங்கக் கூடிய ஒரு field இயல்பாகவே தேர்வு செய்யப்பட்டு வெளிப்படுகிறது. இதை நாம் நீக்க விரும்பினால் ‘Index contains time-based events’ எனும் தேர்வினை நீக்கி விடவும். இது பின்வருமாறு அமையும்.




3. இப்போது Create எனும் பொத்தானின் மீது சொடுக்கவும். இது interviews-ல் உள்ள நிகழ்வுகள் அனைத்தையும் பின்வருமாறு ஏற்றம் செய்து வெளிப்படுத்தும். இந்த interviews-ன் இடப்புறத்தில் ஒரு நட்சத்திரக்குறி இருப்பதை கவனிக்கவும். இது default index என்பதைக் குறிக்கிறது. அதாவது Discover, Visualize போன்ற kibana-

வின் மற்ற பகுதிகளுக்குச் செல்லும்போது இதன் தரவுகள் தான் default-ஆக வெளிப்படும்.



4. இதே முறையில் earthquakes, twitter_elastic_example ஆகியவற்றையும் ஏற்றம் செய்து விடவும். ஆனால் இவைகளை காலநேர அடிப்படையிலான நிகழ்வுகளாக ஏற்றம் செய்யவும். அதாவது இயல்பாக இருக்கும் 'Index contains time-based events' எனும் தேர்வினை நீக்கி விடாமல், தானாகவே வெளிப்படும் @timestamp எனும் மதிப்பினையும் மாற்றிவிடாமல், create-ன் மீது சொடுக்கவும்.




5. இப்போது Management-பக்கத்தின் இடப்புறத்தில் நாம் ஏற்றம் செய்த அனைத்து index-ன் பட்டியலையும் காணலாம். பொதுவாக முதலில் ஏற்றம் செய்யப்படுவதுதான் default index-ஆக அமையும். இதை நாம் மாற்ற விரும்பினால் இடப்புறப் பட்டியலிலிருந்து நமக்கு வேண்டிய index-ஐ தேர்வு செய்து வலது கோடியில் உள்ள நட்சத்திரக்குறி மீது சொடுக்கவும். இங்கு twitter_elastic_example என்பது default-ஆக மாற்றப்பட்டுள்ளது.




## II. Discover

இப்பகுதியில் Kibana-க்குள் ஏற்றம் செய்யப்பட்ட அனைத்து indices மற்றும் அவைகளின் முழுமையான தரவுகள் அனைத்தும் காணப்படும். இதிலிருந்து நமக்கு வேண்டிய தரவினை மட்டும் தேடி எடுத்து அத்தரவுத் தொகுப்புக்கு ஒரு பெயர் வைத்து சேமித்து வைத்துக்கொள்ளலாம். பின்னர் தேவைப்படும் நேரங்களில் அப்பெயரின் மீது சொடுக்கினால் அத்தரவுத் தொகுப்புகள் நமக்கு வெளிப்படுவதைக் காணலாம். இதனை நாம் பிறருடன் பகிர்ந்து கொள்ளவும் செய்யலாம். இவற்றில் உள்ள முக்கியப் படிகள் பின்வருமாறு.

1. இப்பகுதியில் default-ஆக தேர்வு செய்யப்பட்டுள்ள twitter_elastic_example எனும் index-ன் தரவுகள் காணப்பட வேண்டும். ஆனால் இங்கே ‘No results found’ என்பது வெளிப்பட்டுள்ளது. என்ன காரணம் என்று பார்த்தால் New, Save, Open, Share, Auto-refresh ஆகியவை அமைந்துள்ள பொத்தான்களின் வரிசையில் கடைசியாக ‘Last 15 minutes’ எனும் கால-நேர வகை தேர்வு செய்யப்பட்டுள்ளது. இது Kibana-வின் இயல்பான தேர்வு ஆகும். அதாவது கடைசி 15 நிமிடத்திற்குள் ES-ல் செலுத்தப்பட்ட தரவுகள் மட்டுமே இங்கு வெளிப்பட வேண்டும் என்று அர்த்தம். ஆனால் இத்தரவுகள் ES-ல் செலுத்தப்பட்டு கிட்டத்தட்ட 1 மாதம் ஆகியிருக்கும். எனவே இதற்கேற்றார் போன்ற ஒரு கால-நேர வகையைத் தேர்வு செய்ய வேண்டும். பின்வரும் 3 விதங்களில் இதனை நாம் தேர்வு செய்யலாம்.




1.1 Quick: சுருக்காக ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் அமையும் தரவுகளை வெளிப்படுத்துவதற்கு இவ்வகை உதவும். இதில் தென்படும் கால-நேர மதிப்புகளை மேற்கண்ட படத்தில் காணலாம்.

1.2 Relative: இதில் உள்ள மதிப்புகள் எதிலிருந்து எதுவரை என்று நம்மிடம் கேட்பது போல் பின்வருமாறு அமையும்.



1.3 நமக்கு வேண்டிய தரவுகளை தேதி, நேர மற்றும் நிமிட சுத்தமாகப் பெறுவதற்கு இவ்வகை உதவும். இது பின்வருமாறு.




Quick-லிருந்து 'Last 30 days' என்று தேர்வு செய்யும்போது தரவுகள் வெளிப்படுவதைக் காணலாம்.



2. இதில் தரவுகள் அனைத்தும் Time , Source எனும் 2 பிரிவுகளின் கீழ் வெளிப்பட்டுள்ளத்தைக் காணலாம். ஏனெனில் நாம் இதனை ஏற்றம் செய்யும்போதே Time based events-ஆக அமைத்துள்ளோம். இங்கு வெளிப்பட்டுள்ள வரைபடமும் இதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.
ஆனால் இந்த வரைபடத்துக்கும் தரவுகளுக்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசம் என்னவெனில், அனைத்துத் தரவுகளும் Aug 25-ம் தேதியில் ES-க்குள் செலுத்தப்பட்டிருப்பதால் அந்தத் தேதியில் மட்டும் bar வரையப்பட்டுள்ளத்தை கவனிக்கவும். ஆனால் வெளிப்பட்டுள்ள தரவகளோ அந்த ஒரே தேதியில் அமையாமல் வினாடி நேர வேறுபாட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதேபோன்று வரைப்படத்தையும் மாற்ற அதன் இயல்பான தேர்வான Auto என்பதனை Millisecond என்று மாற்றி விடவும். பின்னர் அந்த ஒரே ஒரு bar வரையப்பட்டுள்ள பகுதியின் மீது cursor மூலம் drag செய்து விட்டால், அப்பகுதியில் உள்ள தரவுகள் அனைத்தும் வினாடி நேர வித்தியாசத்தில் பிரிக்கப்படுவதைக் காணலாம். இது பின்வருமாறு.




3. அடுத்ததாக ஒருசில முக்கியத் தரவுகளை மட்டும் எவ்வாறு எடுத்து வைத்துக்கொள்வது என்று பார்க்கலாம். twitter_elastic_example எனும் index-ல் "விநாயகர் சதுர்த்தி" என்று tweet செய்தவர்களின் தரவுகள் அனைத்தும் இடம்பெற்றுள்ளது. இதில், □ எத்தனைபேர் #Vinayakar என்று பதிவிட்டுள்ளனர்□ எத்தனை பேர் k-க்குப் பதிலாக g-ஐப் பயன்படுத்தி #Vinayagar என்று பதிவிட்டுள்ளனர் □ எத்தனை பேர் #Ganesh எனும் வார்த்தையைப் பயன்படுத்தி பதிவிட்டுள்ளனர்
என்று தேடி அவற்றை தனித்தனியாக சேமிக்கப் போகிறோம். தேடலுக்கான பெட்டியில் Vinayakar எனக் கொடுத்து தேடவும். 2 பேர் இவ்வாறு பதிவிட்டுள்ளனர் என்று பின்வருமாறு வெளிப்படுத்தும்.




இதனை Save-ன் மீது சொடுக்கி அதற்கான ஒரு பெயரை அளித்து (No.of.Vinayakar) சேமித்து வைத்துக்கொள்ளவும்.




4. பின்னர் மீண்டும் New-ன் மீது சொடுக்கி Vinayagar , Ganesh என்றெல்லாம் தேடி அவற்றையும் சேமித்து வைத்துக் கொள்ளவும்.







இப்போது,

- No.of.Vinayakar எனும் பெயரில் 2 தரவுகளும்
- No.of.Vinayagar எனும் பெயரில் 13 தரவுகளும்
- No.of.Ganesh எனும் பெயரில் 420 தரவுகளும் சேமிக்கப்பட்டுள்ளன

இவ்வாறாக நமக்கு வேண்டிய தரவுகளை மட்டும் தேடி அதனை ஒரு பெயர் கொடுத்து சேமித்து வைத்துக் கொள்ளலாம். Open-ன் மீது சொடுக்கி நமக்கு வேண்டிய தரவுத் தொகுப்பினை எடுத்துக் கொள்ளலாம்.

5. Share என்பது நாம் சேமித்துள்ளவற்றை பிறருடனோ அல்லது பிற இடங்களிலோ பகிந்து கொள்ள உதவும். இதில்,

- Share saved search எனும் வகையில் உள்ள இணைப்பைப் பயன்படுத்திப் பகிர்ந்தால், நாம் பகிரக்கூடிய நபரால் அதில் மாற்றம் செய்ய இயலும்.
- Share Snapshot எனும் வகையில் பகிர்ந்தால், எவ்வித மாற்றமும் செய்ய இயலாது. அது ஒரு image-ஆக மட்டுமே பகிரப்படும்.




6. அடுத்ததாக interviews எனும் index-ஐ தேர்வு செய்தால் அது பின்வருமாறு வெளிப்படுவதைக் காணலாம்.




இதில் காணப்படும் தரவுகள் கால-நேர அடிப்படையில் பிரிக்கப்படவில்லை. எனவே அதற்கான வரைபடமும் இல்லை. ஏனெனில் இவை Kibana-க்குள் ஏற்றம் செய்யப்படும்போதே 'இது time-based events அல்ல' என்று கூறுவதுபோல் அத்தேர்வினை நீக்கிவிட்டே ஏற்றம் செய்தோம். ஆகவே வெறும் தரவுகள் மட்டுமே வெளிப்பட்டுள்ளது. இதேபோல் Discover-ல் அடுத்தடுத்த index-ஐ தேர்வு செய்து மேற்கூறிய அனைத்தையும் வெவ்வேறு தரவுகளுக்கு செய்து பார்க்கவும்.

## 5.2 III. Visualize

Visualize என்பது தரவுகளுக்கு ஏற்றார் போன்று வரைபடங்களை வரைந்து காட்டுகின்ற ஒரு பகுதி ஆகும். இதில் உள்ள படிகளைப் பின்வருமாறு காணலாம்.

1. முதலில் 'Create a visualization' என்பதின்மீது சொடுக்கவும்.




இது “எந்த வடிவில் உங்களுக்கு வரைபடங்கள் வேண்டும்” என்று கேட்பது போல் Select visualization type எனும் பக்கத்தினை வெளிப்படுத்தும். இதில் பல்வேறு விதமான வரைபட வகைகள் காணப்படும். இதில் ஒன்றை நாம் தேர்வு செய்ய வேண்டும். Pie என்பதனைத் தேர்வு செய்து கொள்ளவும்.




2. பின்னர் நாம் தேர்வு செய்திருக்கின்ற pie -க்கான மூலத் தரவுகளை நாம் புதிதாகத் தேடி எடுக்கப் போகின்றோமா அல்லது ஏற்கனவே தேடி எடுத்து வைத்த தரவுகளுக்கு வரைபடங்களை உருவாக்கப் போகின்றோமா என்று கேட்பது போல, From a New Search or From a Saved Search என்று 2 பகுதிகள் வெளிப்படும்.

- From a New Search: Kibana- ல் உள்ள அனைத்து index-ன் பட்டியலும் இங்கு காணப்படும்.
- From a Saved Search: நாம் சேமித்து வைத்த அனைத்துத் தரவுகளின் பட்டியலும் இங்கு காணப்படும்.

நாம் 'From a New Search' என்பதிலிருந்து twitter_elastic_example-என்பதனைத் தேர்வு செய்து கொள்ளலாம்.




3. பின்னர் எந்தெந்த நாடுகளிலிருந்து எவ்வளவு பேர் பதிவிட்டுள்ளனர் என்பதற்கான pie வரைபடம் பின்வருமாறு அமையும்.



4. இதனை ‘Country_wise_split’ என்று ஒரு பெயர் கொடுத்து சேமித்து வைத்துக் கொள்ளவும்.




5. இப்போது Visualize-ல் நாம் சேமித்து வைத்த வரைபடங்களின் பட்டியல் காணப்படும்.




இதே போன்று பல்வேறு வகையான வரைபடங்களை பல்வேறுபட்ட தரவுகளுக்கு வரைந்து பார்க்கவும்.

## 5.3 IV. Dashboard

Dashboard என்பது பல்வேறு வரைபடங்களை ஒன்றாக இணைத்தோ அல்லது புதிதாக வரைபடங்களை வரைந்து அவற்றை ஒன்றுடன் ஒன்று இணைத்தோ காட்சிப்படுத்த உதவும் ஒரு செயல்பாடு ஆகும். பல்வேறு விதமான தரவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வரைபடங்களின் தொகுப்பிற்கு Dashboard என்று பெயர். எடுத்துக்காட்டுக்கு twitter_elastic_example எனும் index-ல்,

- மொத்தம் எத்தனை tweets செய்யப்பட்டுள்ளன
- அவை எந்தெந்த நாடுகளிலிருந்து செய்யப்பட்டுள்ளன
- அவற்றுள் Ganesh, Vinayakar, Vinayagar போன்ற வெவ்வேறு வார்த்தையைப் பயன்படுத்தி tweet செய்தவர்களின் மொத்த எண்ணிக்கை

ஆகிய 3 தனித்தனி விவரங்களை, 3 தனித்தனி வரைபடங்களாக வரைந்து அவற்றை ‘Twitter Dashboard’ எனும் பெயரில் தொகுத்து உருவாக்குவது எவ்வாறு என்று பின்வருமாறு காணலாம்.

1. முதலில் ‘Create a dashboard’ என்பதின்மீது சொடுக்கவும்.




2. Add Panels - என்பதில் கீழ்க்கண்ட இரு பிரிவுகள் காணப்படும்.

- Visualization: இதில் வரைபடமாக மாற்றப்பட்ட தரவுகளின் பட்டியல் காணப்படும்.
- Saved Search: இதில் discover பகுதியில் தேடி எடுத்து சேமித்து வைத்த தரவுகளின் பட்டியல் காணப்படும்.

இவற்றில் Visualization-ன் கீழ் அமைந்துள்ள Country_wise_split ன் மீது சொடுக்கினால் அது dashboard panel-ல் இணைக்கப்பட்டுவிடும். பின்னர் Add new Visualization-ன் மீது சொடுக்கி ஒரு புது வரைப்படத்தை உருவாக்கவும்.



3. இது எத்தனைபேர் Ganesh, Vinayakar, Vinayagar போன்ற வெவ்வேறு வார்த்தையைப் பயன்படுத்தி tweet செய்துள்ளனர் என்பதற்கான ‘Data Table’ வகையச் சேர்ந்த வரைபடம் ஆகும். இதனை Table எனும் பெயரில் சேமித்துக் கொள்ளவும்.




4. அவ்வாறே மொத்தம் எத்தனை tweets செய்யப்பட்டுள்ளன என்பதை ‘Total Tweets’ எனும் பெயரில் Metric வகை வரைபடமாக சேமித்துக் கொள்ளவும்.
5. கடைசியாக Add Panel-ல் சென்று drag & drop மூலம் மேற்குறிப்பிட்ட 3 வரைப்படத்தையும் இணைத்து பின்வருமாறு ஒரு dashboard-ஐ உருவாக்கவும்.




இதே முறையில் வெவ்வேறு index-க்கு வெவ்வேறு dashboards-ஐ உருவாக்கிப் பார்க்கவும்.

## 5.4 V. Dev Tools

இப்பகுதி கட்டளையை நேரடியாக execute செய்து அதற்கான விடையை சரிபார்க்கின்ற ஒரு இடம் ஆகும். இது Console-ஐப் பிரதிபலிக்கும். Kibana- வின் மற்ற பகுதிகளில் நேரடியாக சிக்கலான query-ஐ எழுதி தரவுகளை எடுக்காமல், இப்பகுதியில்

ஒருமுறை இயக்கி அதனை சரி பார்த்துக்கொள்ளலாம்.



# 6 HADOOP

## 6.1 வரலாறு

Hadoop என்பது Apache நிறுவனம் வழங்குகின்ற திறந்த மூல மென்பொருள் கருவி ஆகும். இதனை Doug Cutting என்பவர் உருவாக்கினார். இது பெரிய தரவில் கூறப்படுகின்ற பல்வேறு வேலைகளையும் குறைந்த செலவில் திறம்பட செய்வதற்காக உருவாக்கப்பட்ட பல்வேறு மென்பொருள்களின் கூட்டமைப்பு ஆகும். Hadoop உருவாக்கத்திற்கு முன்னர் Doug Cutting என்பவர் 'Apache Lucene' எனும் கருவியை உருவாக்கியிருந்தார். இக்கருவியைப் பற்றி நாம் ELK Stack-ல் ஏற்கனவே பார்த்துள்ளோம். வாக்கியங்கள்/வார்த்தைகளின் அடிப்படையில் துரிதமாகத் தேடல்களை நிகழ்த்துவதற்கு ஏற்ற வகையில் முதன்முதலில் வடிவமைக்கப்பட்டதே Apache's Lucene எனும் இயந்திரம் ஆகும். அதற்கும் முன்னர் Apache Nutch எனும் ஒரு சிறிய அளவிலான கருவி இவ்வேலைக்காகப் பயன்பட்டது. அதாவது 1990 – 2000 ஆண்டுகளில் வலைத்தலங்களில் காணப்படும் தரவுகளின் எண்ணிக்கை மில்லியன், பில்லியன் என உயர ஆரம்பித்தபோது, நாம் தேடும் விவரங்களை விரைவாகப் பெறுவது என்பது சற்று கடினமாகவும், நேர விரயம் தரக்கூடியதாகவும் இருந்தது. இப்பிரச்சனைகளை சமாளிப்பதற்காக Doug Cutting மற்றும் Mike Cafarella ஆகியோர் இணைந்து Nutch எனப்படும் ஒரு web crawler-ஐ உருவாக்கினர். இது வலைத்தளப்பக்கங்களை பதிவிறக்கம் செய்து தரவுகளை சேமித்துக்கொண்டே வரும் வல்லமை மிக்கது. பின்னர் இத்தகைய அதிக அளவிலான தரவுகளை முறையாகப் பிரித்து, சேமித்து, துரிதமாக எடுத்து வெளிப்படுத்துவதற்காக முதன்முதலில் உருவாக்கப்பட்ட ஒரு தேடுபொறிதான் Apache Lucene ஆகும். ஆனால் இத்தகைய Nutch, Lucene ஆகியவற்றின் செயல் திறன்களும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கே இருந்தன. இவற்றால் அதிக அளவிலான தகவல்களைக் கையாள முடியவில்லை. இந்நிலையில்தான் 2004-ஆம் ஆண்டு Google நிறுவனம் 'Google Distributed Filesystem (GFS)' எனும் கட்டமைப்பினை உருவாக்கி அது பற்றிய ஆய்வு அறிக்கைகளை வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து 2005-ம் ஆண்டு Mapreduce- ஐ உருவாக்கி அதன் ஆய்வு அறிக்கைகளை வெளியிட்டது. இவ்விரண்டும் மிக அதிக அளவிலான (terabyte கணக்கில்) தரவுகளை சேமித்தும், அவற்றை ஒருசில நொடிகளில் பகுத்தாய்வு செய்து வெளிப்படுத்தியும் திறம்பட செயல்பட்டு வந்தன.

இவைகளைப் பின்பற்றியே அதற்கு அடுத்தடுத்த ஆண்டுகளில் NDFS (Nutch Distributed File System) மற்றும் Nutch- க்கான 'Mapreduce' ஆகியவை google வெளியிட்ட ஆய்வு அறிக்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. 2006-ம் ஆண்டு ஆண்டில் தான் Doug Cutting, yahoo-நிறுவனத்தில் இணைந்து Nutch திட்டத்தை விரிவுபடுத்தும் வேலையைச் செய்தார். இதன்படி வலைத்தளப்பக்கங்களை அப்படியே பதிவிறக்கம் செய்து சேமித்துக்கொண்டே செல்லும் web crawler-க்கு Nutch என்றும். அவற்றை முறையாகப் பகுத்து பிரித்தாய்ந்து சேமிக்கும் முறைக்கு Hadoop என்றும் பெயரிடப்பட்டன . அதாவது Apache Lucene-ல் காணப்பட்ட ஒருசில சிரமங்களைக் களைந்து அதன்செயல்பாட்டுத் திறன்களையும் விரிவுபடுத்தி உருவாக்கப்பட்ட ஒன்றே Hadoop ஆகும். இதற்கு அவர் Hadoop-எனப் பெயரிட்டதற்கும், யானை பொம்மையை சின்னமாக வைத்ததற்கும் ஒரு தற்செயலான நிகழ்வே காரணமாக அமைந்தது. அவரது அன்புக்குரிய 2 வயது மகன் ஆசையோடு எடுத்து விளையாடும் மஞ்சள் நிற யானை பொம்மையின் பெயர்தான் இந்த Hadoop. இதைப்பற்றி அவர் கூறுகையில் "இப்பெயருக்கு எந்தஒரு அர்த்தமும் இல்லை. இது சொல்வதற்கு சுலபமாகவும், கவர்ச்சிகரமாகவும், வேறெங்கும் பயன்படுத்தாத வகையிலும் இருப்பதால் இப்பெயரையே வைத்துவிட்டேன். குழந்தைகள் எப்போதுமே இதுபோன்ற விஷயங்களை உருவாக்குவதில் சிறந்தவர்கள். Googol என்பதும் ஒரு குழந்தையின் உருவாக்கம்தானே" என்று குறிப்பிட்டுள்ளார்.

Hartonworks எனும் நிறுவனம் 2011-ம் ஆண்டு Rob Bearden என்பவரால் உருவாக்கப்பட்டது. இவர் இந்நிறுவனத்தை Yahoo-வுடன் இணைந்து, Hadoop உருவாக்கத்திற்கு உதவிய அதே மென்பொருளாளர் குழுவை வைத்து உருவாக்கினார். இந்நிறுவனம் பெரிய தரவு மேளாண்மைக்காக Apache-ன் hadoop கருவிகளில் ஒருசில முக்கியக் கருவிகளை இணைத்து ஒரு கட்டமைப்பாக நமக்கு வழங்குகிறது. இதன்மூலம் பயணர்கள் அவர்களுக்கு வேண்டிய கருவிகளை தனித்தனியாக சிரமப்பட்டு நிறுவத் தேவையில்லை. இந்தக் கட்டமைப்புக்குள் சென்று வேண்டிய கருவிகளைத் தேர்வு செய்தால் போதுமானது. அவை அனைத்தும் சுலபமாக எவ்விதப் பிரச்சனையும் இல்லாமல் நமது கணினியில் நிறுவப்பட்டுவிடும். இதுவே HDP (Hartonworks Data Platform) என்று அழைக்கப்படுகிறது. Ambari என்பது HDP-ஐ நிறுவி மேளாண்மை செய்யும் வேலையை பயணர்களுக்கு சுலபமாக்குவதற்காக உலாவி வழியே 8080-எனும் port-ல் இயங்குகின்ற ஒரு கருவி ஆகும்.

## 6.2 HADOOP கட்டமைப்பு

"Hadoop ஒரு தனிக்கருவி அல்ல; பல்வேறு சிறுசிறு கருவிகளின் கூட்டமைப்பே !" என்று ஏற்கனவே பார்த்தோம். இதன் மிக முக்கிய ஆங்கங்களாக HDFS மற்றும் MapReducer ஆகியவை விளங்குகின்றன. இவை முறையே தரவுகளை சேமித்தல் மற்றும் பகுத்தாய்தல் ஆகிய முக்கியப் பணிகளைச் செய்கின்றன. இவற்றுடன் சேர்த்து

Pig, Hive, HBase, Phoenix, Spark, ZooKeeper, Flume, Sqoop, Oozie, மற்றும் Storm ஆகிய கருவிகளையும் Apache நிறுவனம் வழங்குகிறது. இவற்றை நமது தேவைக்கேற்ப Hadoop கட்டமைப்பில் இணைத்தோ/நீக்கியோ பயன்படுத்திக்கொள்ளலாம். இந்தக் கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள கருவிகளையும், அவை எந்தெந்த இடங்களில் பங்களிக்கின்றன என்பதையும் பின்வருமாறு காணலாம்.

1. தரவுகளை சேமித்தல் (Storage) : HDFS, HBase
2. சேமித்தவற்றை நெறிப்படுத்துதல் (Processing) : MapReduce, YARN
3. நெறிமுறைப்படுத்தப்பட்டவற்றை தேவைக்கேற்றபடி பெறுதல் (Access) : Pig, Hive, Mahout, Avro, Sqoop
4. தரவுகளின் மேளாண்மை (Management) : Oozie, Chukwa, Flume, Zoo Keeper

Hadoop கட்டமைப்பின் முதல் வெளியீட்டில் (v1) தரவுகளை சேமிப்பதற்கு hdfs-ம் அவற்றிலிருந்து தரவுகளை நெறிமுறைப்படுத்தி அடுத்த நிலைக்கு பக்குவப்படுத்துவதற்கு mapreduce-ம் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறே அதன் இரண்டாவது வெளியீட்டில் (v2) சேமிக்கும் வேலைக்கு hbase-ம் பதப்படுத்தும் வேலைக்கு yarn-ம் வெளிவந்தன. மற்ற கருவிகள் அனைத்திற்கும் பொதுவானவை. இவை ஒவ்வொன்றைப்பற்றியும் பின்வருமாறு காணலாம்.

### 6.2.1 HDFS

Hadoop Distributed File System என்பதுதான் அனைத்திற்கும் அடித்தளம். இது அதிக அளவிலான கோப்புகளை அணுகி சேமிக்க வல்லது. இதன் ஆற்றல் ஒரே ஒரு கணினியில் சேமிப்பதோடு நின்றுவிடாமல், கோப்புகளின் எண்ணிக்கை பெருகப் பெருக பல்வேறு கணினியில் அவற்றைப் பிரித்து சேமிக்க வல்லது. இவ்வாறு ஒன்று போன்ற தகவல்களைப் பிரித்து சேமித்துள்ள அனைத்துக் கணினிகளும் cluster முறையில் இணைக்கப்பட்டு அவற்றில் ஒரு கணினி server-ஆகவும் மற்றவை clients-ஆகவும் செயல்புரியத் துவங்கும். server-ல் உள்ளது master node எனவும், clients-ல் உள்ளது data node எனவும் அழைக்கப்படும். இதில்தான் தரவுகள் சென்று சேரும்.

### 6.2.2 Hbase

Hadoop database என்பதுதான் Hbase என்றழைக்கப்படுகிறது. இது NoSQL-ஐ அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டது. எனவே வடிவற்ற தகவல்களையும் சேமிக்கும் திறன் பெற்று விளங்குகிறது. ஆனால் கோப்பு முறையில் தரவுகள் சேமிக்கப்படுவதிலிருந்து இது வித்தியாசப்பட்டு விளங்குகிறது. ஒரு database-ல்

சேமிப்பது போன்று இதில் தரவுகள் சேமிக்கப்படுகின்றன. எனவே திடீரென இடையில் தகவல்களைப் போடுவதோ எடுப்பதோ இங்கு சுலபமாகிறது.

### 6.2.3 MapReducer

சேமிக்கப்பட்ட தகவல்களை பதப்படுத்தி, பக்குவப்படுத்தி, அடுத்த நிலைக்கு வேண்டியவாறு நெறிமுறைப்படுத்தும் வேலையை Mapreducer செய்கிறது. இது Mapper மற்றும் Reducer எனும் இருவேறு algorithmns ஆகும். இது cluster முறையில் இணைக்கப்பட்டுள்ள அனைத்துக் கருவிகளிலிருந்தும் தகவல்களை அணுக வல்லது. இதனுடைய சிறப்பே அதன் வேகம்தான். அதாவது இத்தகைய வேலைகளைச் செய்வதற்கு rdbms 20 மணி நேரம் எடுத்துக்கொள்கின்றது என்றால், இக்கருவி அதனை 3 மூன்றே நிமிடங்களில் முடித்துவிடும்.

### 6.2.4 YARN

இது ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்ற அனைத்து கணினிகளையும் மேளாண்மை செய்வதற்கும், அவற்றுக்குள் வேலைகளை ஒதுக்கீடு செய்து தொடர்ச்சியாக அவற்றைக் கண்காணிப்பதற்கும் பயன்படுகின்ற cluster மேளாண்மைக்கான ஒரு மென்பொருள் கருவியாகும். Yet another resource negotiator என்பது இதன் பொருள். இதுவும் mapreducer-ன் பணிகளையே செய்கிறது என்றாலும், புதுப்புது அணுகுமுறைகளில் தரவுகளைக் கையாண்டு அதன் பணிகளை இன்னும் சுலபமக்குகிறது. எனவே இதனை mapreducer-ன் இரண்டாம் தலைமுறை என்று கூறலாம்.

### 6.2.5 Pig

இது தரவுகளை எவ்விதம் மாற்ற வேண்டும், எவ்வாறு மாற்ற வேண்டும் (data transformation logic) என்பதை கணினிக்கு கூற உதவும் ஒரு நிரலாக்க மொழி ஆகும். SQL போன்று செயல்படக் கூடிய இந்த நிரலாக்க மொழி PigLatin என்றும், இதை வைத்து உருவாக்கப்படுபவை PigPrograms என்றும் அழைக்கப்படுகின்றன. இத்தகைய programs-தான் Mapreducer algorithmn-களில் எழுதப்பட்டு அவை hadoop cluster-ல் இயக்கப்படுகின்றன. Pig-ல் பயனர்கள் தாங்களே ஒரு function-ஐ வரையறுப்பதன் (User Defined Functions) மூலம் Jruby, Jython, Java போன்ற மற்ற நிரலாக்க மொழிகளுடனும் இணைந்து செயல்பட முடியும். இதன் விளைவாக நிகழ்காலப் பிரச்சனைகளை அலசுவதற்கு உதவும் விதமாக உருவாக்கப்பட்ட ஒருசில பயன்பாட்டியல்களில் Pig ஒரு கருவியாக சுலபமாக இணைந்து செயல்பட வல்லது .

### 6.2.6 Hive

இதுவும் SQL போன்று செயல்படக் கூடிய ஒரு மொழிதான். ஆனால் Pig என்பது ஒரு scripting மொழியெனில், Hive என்பது ஒரு query மொழி. Transformation Logic-ஐ எழுதுவதற்கு நிரலாக்க மொழியில் பழக்கமுள்ளவர்கள் Pig-ஐத் தேர்வு செய்வார்கள். ETL, Data Warehousing போன்ற துறைகளில் வேலைப்பார்த்து SQL-ல் அதிக பழக்கமுள்ளவர்கள் Hive-ஐத் தேர்வு செய்வார்கள் . மற்றபடி இரண்டும் கிட்டத்தட்ட ஒரே வேலையைச் செய்வதற்குத்தான் பயன்படுகின்றன. தரவுகளை அணுகும் முறைகளில்தான் இவை வேறுபட்டு விளங்குகின்றன.

### 6.2.7 Mahout

இது இயந்திரவழிக் கற்றலுக்கு(machine learning) உதவும் algorithmns-ஐக் கொண்ட ஒரு நூலகம் ஆகும். இதுவே செயற்கை அறிவுத்திறனை (Artificial Intelligence) வளர்ப்பதற்கு அடித்தளமாக விளங்குகிறது. இப்பிரிவில் இயந்திரங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதனை வெளிப்படையாக நிரல்கள் மூலம் சொல்லத் தேவையில்லை. hdfs-ல் உள்ள அதிகப்படியான தரவுகளிலிருந்து தாமாகவே ஒரு pattern-ஐக் கண்டுபிடித்து, அடுத்த நிலைக்குச் செல்லும் திறன் பெற்றதாக இயந்திரங்களை மாற்றுவதற்கு இத்தகைய Mahout algorithmns உதவுகின்றன. இவற்றை நாம் Mapreducer-ல் பயன்படுத்தி hdfs-ல் உள்ள தரவுகளைக் கையாளச் செய்யலாம்.

### 6.2.8 Avro

Data Serialization-க்கு உதவுகின்ற ஒரு கோப்பு வகைதான் இந்த Avro. இதனையும் Doug Cutting என்பவர்தான் கண்டுபிடித்தார். ஒரு மாபெரும் தரவுத் தளத்திலுள்ள தரவுகளை எடுத்து json வடிவிலோ, binary வடிவிலோ கொடுப்பதற்கு Data Serialization என்று பெயர். உதாரணத்துக்கு 1TB அளவுகொண்ட தரவுகளை text வடிவில் மாற்றினால் அது 2TB அளவுடையதாகவும், அதையே binary வடிவான avro வடிவில் மாற்றினால் அது 500MB அளவுடையதாகவும் மாறிவிடும். இவ்வாறு அதிக அளவு கொண்டவற்றை குறைந்த அளவில் மாற்றுவதற்குத் தான் zip, tar ஆகியவை ஏற்கனவே உள்ளனவே என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் இவையெல்லாம் ஒரே கணினியில் வேண்டுமானால் சுலபமாக unzip, untar செய்து பயன்படுத்தப்படலாம். இதுவே ஒரு cluster என்று வரும்போது இத்தகைய வடிவங்கள் உதவாது. அதற்கென சிறப்பாக உருவாக்கப்பட்ட ஒரு கோப்புவடிவம் தான் இந்த Avro.

Avro வடிவில் சுருக்கப்பட்ட தரவுகளைப் பிரித்து பல்வேறு கணினிகளுக்கு அனுப்பும்போது, எந்த ஒரு தகவல் இழப்பும் ஏற்படாமல், அவைகள் பிரிக்கப்பட்ட அளவில் தனித்தனியே process செய்யப்படும். இதற்கென Compressible மற்றும் splittable எனும் இரு வடிவங்களில் binary கோப்புகள் உருவாக்கப்படுகின்றன. இதுவே இதன் சிறப்பம்சம் ஆகும். மேலும் இத்தகைய கோப்புகளை பல்வேறு வகை நிரலாக்க மொழிகளாலும் எடுத்துப் படிக்க முடியும். Avro schema-வானது json வடிவில் வரையறுக்கப்பட்டு முழுமையாக அதைச் சார்ந்தே செயல்படுகிறது. எனவே இது மொழி சார்பற்றதாகவும் schema-based ஆகவும் விளங்குகிறது.

### 6.2.9 Sqoop

தரவுத்தளம் / தரவுக்கிடங்கு (database / datastores) ஆகியவற்றிலிருந்து hadoop-க்கு மொத்தமாக (bulk-data processing)தரவுகளைப் பரிமாற்றம் செய்வதற்கு sqoop (SQL + Hadoop) பயன்படுகிறது. என்பதே sqoop ஆகும். ETL-க்குத் துணைபுரியும் வகையில் தரவுகள் அனைத்தையும் தரவுக்கிடங்கிலிருந்து(EDW) hadoop-க்கு மாற்றியும், அவ்வாறே hadoop-லிருந்து கிடங்கிற்கு மாற்றியும் குறைந்த செலவில் திறம்பட செயலாற்றுவதற்கு இது உதவுகிறது. மேலும் Teradata, Mysql, Oracle, Postgre போன்ற அனைத்து வகையான தரவுத்தளத்துடனும் இது இணைந்து செயலாற்ற வல்லது.

### 6.2.10 Oozie

இது ஒரு workflow schedular ஆகும். ஒன்றுடன் ஒன்று சார்பு கொண்ட தொடர்ச்சியான வேலைகளை அடுத்தடுத்து இயக்கப் பயன்படும். அதாவது தனிச்சையாக இயங்கக்கூடிய வேலைகளைக் கையாள்வது சுலபம். ஆனால் ஒரு வேலையின் வெளியீட்டை வைத்துத்தான் மற்றொன்று தன் செயல்பாட்டைத் துவங்கவேண்டுமெனில், அதற்கு இந்த Oozie பயன்படுகிறது. இதில் DAG (Directed Acyclical Graphs) எனும் வரைப்படத்தை உருவாக்கி, அதன் மூலம் பல்வேறு வேலைகளின் தொடர்புகளையும், அவை இயக்கப்பட வேண்டிய வரிசைமுறைகளையும் தெளிவாக விளக்கலாம். இதில் ஒரு node செயலுக்காகவும், மற்றொன்று செயல்களை தீர்மானிக்கவும் பயன்படுகிறது. Action node என்பது செயலுக்கானது. Hdfs-ல் கோப்புகளை கொண்டு சேர்த்தல், mapreducer-ஐ இயக்குதல், pig/hive-ன் இயக்கங்களைத் துவக்குதல், பல்வேறு மூலங்களிலிருந்து தரவுகளை இறக்குதல் ஆகியன இதில் அடங்கும். Control node என்பது செயல்களை தீர்மானிக்கக் கூடியது. அதாவது ஒரு வேலையின் முடிவினை வைத்து அடுத்து எங்கு செல்ல வேண்டும், எந்த விதமான முடிவுக்கு எங்கிருந்து அடுத்தடுத்த வேலைகளைத் துவங்க வேண்டும் போன்ற அனைத்தையும்

தீர்மானிக்கிறது. Start, End, Error ஆகிய nodes அனைத்தும் இந்த செயல்களைத் தீர்மானிக்கும் node வகையின் கீழ் வருகின்றன.

### 6.2.11 Chukwa

பொதுவாக hadoop என்பது hdfs-க்குள் ஏற்றப்பட்ட நிலையான தகவல்களை எடுத்து தனது வேலைகளைத் துவங்கும். ஆனால் பல்வேறு கணிணிகளிடமிருந்து தொடர்ச்சியாக வருகின்ற logs அனைத்தையும் hdfs-க்குள் செலுத்தி அதனை ஆய்வு செய்வதற்கு இத்தகைய chukwa, flume போன்ற கருவிகள் பயன்படுகின்றன. இதில் agent மற்றும் collector என்று இரண்டு அமைப்புகள் உள்ளன. Agent என்பது தரவுகளை எடுத்து அனுப்புவதற்காக ஒவ்வொரு கணினியிலும் செயல்படுவது. Collector என்பது agent அனுப்பிய தரவுகளைப் பெற்று hdfs-க்குள் அனுப்புவது.

Chukwa எனும் இக்கருவி collection, processing போன்ற பல்வேறு நிலைகளைக் கொண்ட ஒரு குழாய் போன்ற செயல்பாட்டமைப்பினைப் பெற்றிருக்கும். இதன் ஒவ்வொரு நிலையும் பல்வேறு இடைமுகப்புகளால் இணைக்கப்பட்டிருக்கும். எனவே பிற்காலத்தில் புதுப்புது மாறுதல்கள் வந்தாலும்கூட, அதன் தற்போதைய நிலையில் எந்தஒரு குறைப்பாடும் இருக்காது. HICC (Hadoop Infrastructure Care Center) என்பதும் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு உதவுகின்ற வலைப்பக்கத்திற்கான ஒரு இடைமுகப்பு ஆகும். இதன்மூலம் தகவல்களை திறம்பட வெளிப்படுத்தி, கண்காணித்து அதனடிப்படையில் தேர்ந்த முடிவுகளை எடுக்கலாம்.

### 6.2.12 Flume

இதுவும் chukwa போன்றே batch processing-க்கு உதவுகின்ற, ஆனால் அதைவிட மிகக் குறைந்த நேரத்தில் logs-ஐ எடுத்து அனுப்பும் ஒரு கருவியாகும். Chukwa என்பது 5 நிமிடத்திற்கு ஒருமுறை batch முறைப்படி logs-ஐ எடுத்து அனுப்பினால், Flume-ஆனது சமகாலத்தில் வந்து கொண்டிருக்கின்ற logs-ஐ எடுத்து உடனுக்குடன் அனுப்புகிறது. இது logs விழ விழ அதனை எடுத்து உடனுக்குடன் Continuous Streaming முறைப்படி அனுப்பிக்கொண்டே இருக்கும்.

### 6.2.13 Zoo Keeper

இக்கருவி பிரிந்து இயங்குகின்ற பல்வேறு பயன்பாட்டியல்களை ஒருங்கிணைக்கப் பயன்படுகிறது. உதாரணத்துக்கு cluster-ல் இயங்கிக்கொண்டிருக்கும் 50-க்கும் மேற்பட்ட கணிணிகளில் ஏதேனும் ஒன்றில் கோளாறு ஏற்பட்டால் கூட அது எந்த node, எங்கிருந்து வருகிறது , மாற்றாக என்ன செய்வது போன்ற அனைத்து விதமான

கோணங்களிலிருந்தும் யோசித்து , மாற்று செயல்பாடுகளுக்கான வேலையைத் துவங்கி அவை அனைத்தையும் பராமரிக்கும் வேலையை Zoo Keeper செய்கிறது.

# 7 HDFS, Mapreducer

ஒரே ஒரு கணினியில் hadoop-ஐ நிறுவினால் அது single node cluster-எனவும், பல்வேறு server-களை இணைத்து நிறுவினால் அது multi-node cluster எனவும் அழைக்கப்படும். இங்கு Ubuntu 16.04 எனும் கணினியில் நிறுவுவது பற்றி பார்க்கலாம்.

1. Hadoop எனும் கட்டமைப்பு Java-ல் எழுதப்பட்டிருப்பதால், முதலில் நமது கணினியில் Java நிறுவப்பட்டுள்ளதா என்பதை $ java -version எனக் கொடுத்து சோதிக்கவும். இது பின்வருமாறு ஒரு வெளியீட்டைக் கொடுத்தால் java நிறுவப்பட்டுள்ளது என்று அர்த்தம். இல்லையெனில் பின்வருமாறு கொடுத்து அதனை நிறுவவும்.

```
$ sudo apt-get install default-jdk
```

```
nithya@nithya-Lenovo-ideapad:~$ java -version
openjdk version "1.8.0_151"
OpenJDK Runtime Environment (build 1.8.0_151-8u151-b12-0ubuntu0.17.10.2-b12)
OpenJDK 64-Bit Server VM (build 25.151-b12, mixed mode)
```

2. பின்னர் hadoop-க்கான முகவரியிலிருந்து அதனை பதிவிறக்கம் செய்யவும். அதனைப் பிரித்து தரவிறக்கப்பட்ட இடத்திலிருந்து நமக்கு வேண்டிய இடத்திற்கு மாற்றிக் கொள்ளவும். மாற்றப்பட்ட directory-க்கான முழு அனுமதிகளையும் பயனருக்கு வழங்க வேண்டும்.

```
$ wget http://redrockdigimark.com/apachemirror/hadoop/common/hadoop-3.0.0/
hadoop-3.0.0.tar.gz
$ tar -xzvf hadoop-3.0.0.tar.gz
$ sudo mv ~/hadoop-3.0.0 /usr/local/hadoop
$ sudo chown -R nithya:nithya /usr/local/hadoop
```

```
nithya@nithya-Lenovo-ideapad:~$ wget http://redrockdigimark.com/apachemirror/had
oop/common/hadoop-3.0.0/hadoop-3.0.0.tar.gz
--2018-03-19 15:12:34--  http://redrockdigimark.com/apachemirror/hadoop/common/h
adoop-3.0.0/hadoop-3.0.0.tar.gz
Resolving redrockdigimark.com (redrockdigimark.com)... 119.18.61.94
Connecting to redrockdigimark.com (redrockdigimark.com)|119.18.61.94|:80... conn
ected.
HTTP request sent, awaiting response... 200 OK
Length: 306392917 (292M) [application/x-gzip]
Saving to: ‘hadoop-3.0.0.tar.gz’

hadoop-3.0.0.tar.gz 100%[===================>] 292.20M  2.13MB/s    in 2m 5s

2018-03-19 15:14:39 (2.33 MB/s) - ‘hadoop-3.0.0.tar.gz’ saved [306392917/3063929
17]
```

```
nithya@nithya-Lenovo-ideapad:~$ sudo mkdir /usr/local/hadoop
nithya@nithya-Lenovo-ideapad:~$ sudo mv ~/hadoop-3.0.0 /usr/local/hadoop
nithya@nithya-Lenovo-ideapad:~$ sudo chown -R nithya:nithya /usr/local/hadoop
```

3. Hadoop என்பது கணினிகளுடன் பேசுவதற்கு Secured Shell (SSH) -ஐப் பயன்படுத்துகிறது. அப்போது நாம் ஒவ்வொருமுறையும் சரியான கடவுச்சொல்லை அளித்தால் மட்டுமே அதனுடன் பேச முடியும். இதனைத் தவிர்க்க SSH-ன் சான்றிதழை எடுத்து அதனை அங்கீகரிக்கப்பட்ட திறவுகோல்களின் பட்டியலில் இணைத்தால் போதுமானது. ஒவ்வொரு கணினியும் கடவுச்சொல் இல்லாமலேயே தங்களுடன் ஒன்றோடொன்று பேசிக்கொள்ள முடியும்.

```
$ ssh-keygen
$ cat ~/.ssh/id_rsa.pub >> ~/.ssh/authorized_keys
```

கோப்பின் பெயர் மற்றும் passphrase ஆகியவற்றைக் கேட்டு இக்கட்டளை நிற்கும் போதெல்லாம் ஒன்றும் அளிக்காமல் enter-ஐ மட்டும் கொடுக்கவும்.
இது நமது home directory-ல் .ssh எனும் folder-ஐ உருவாக்கி, அதற்குள் பின்வருமாறு

கோப்புகளை உருவாக்கும்.

```
nithya@nithya-Lenovo-ideapad:~$ ssh-keygen
Generating public/private rsa key pair.
Enter file in which to save the key (/home/nithya/.ssh/id_rsa):
Enter passphrase (empty for no passphrase):
Enter same passphrase again:
Your identification has been saved in /home/nithya/.ssh/id_rsa.
Your public key has been saved in /home/nithya/.ssh/id_rsa.pub.
The key fingerprint is:
SHA256:Nl37eb0Jszox5zPe+C0A16IT1LcbO8+EwLEPuDTqsYc nithya@nithya-Lenovo-ideapad
The key's randomart image is:
+---[RSA 2048]----+
|           .     |
|          . o .  |
|         . o.= . |
|         .*.B.+  |
|        So.B.= = |
|       .o.+o.o*.o|
|       . + .=+o=o|
|        E .. +B.*|
|         .  .+++*.|
+----[SHA256]-----+
nithya@nithya-Lenovo-ideapad:~$ cat ~/.ssh/id_rsa.pub >> ~/.ssh/authorized_keys
```

• id_rsa (தனிப்பட்ட திறவுகோல்)
• id_rsa.pub (பொதுவான திறவுகோல்)
• authorised_keys (அங்கீகரிக்கப்பட்ட திறவுகோல்கள்)

இதில் id_rsa.pub என்பதுதான் SSH-க்கான சான்றிதழ். இதனை நாம் authorised_keys என்பதற்குள் போட வேண்டும். இதேபோல் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கணினியிலிருந்தும் அதனதன் id_rsa.pub கோப்பினை SCP செய்து அவற்றையும் இந்த authorised_keys-க்குள் போட வேண்டும். இவ்வாறு செய்தால் ஒவ்வொரு கணினியும் கடவுச்சொல் இல்லாமலேயே தங்களுடன் பேசிக் கொள்ள முடியும்.

4. அடுத்ததாக நமது home directory-ல் உள்ள .bashrc எனும் கோப்பிற்குள் கடைசியில் சென்று பின்வரும் விவரங்களை இணைக்க வேண்டும். ஒருசில மதிப்புகள் தெரியவில்லையெனில் echo $Variablename எனக் கொடுத்து அதன் மதிப்பினைப் பெறலாம். உதாரணத்துக்கு echo $JAVA_HOME எனும் கட்டளை நமது கணினியில் java நிறுவப்பட்டுள்ள இடத்தின் பாதையைக் காட்டும். அதை எடுத்து இங்கு பயன்படுத்தலாம்.

```
$ vim ~/.bashrc
#HADOOP VARIABLES START
export JAVA_HOME=/usr/lib/jvm/java-8-openjdk-amd64/jre/
export HADOOP_INSTALL=/usr/local/hadoop/hadoop-3.0.0
export PATH=$PATH:$HADOOP_INSTALL/bin
export PATH=$PATH:$HADOOP_INSTALL/sbin
export HADOOP_MAPRED_HOME=$HADOOP_INSTALL
export HADOOP_COMMON_HOME=$HADOOP_INSTALL
export HADOOP_HDFS_HOME=$HADOOP_INSTALL
export YARN_HOME=$HADOOP_INSTALL
export HADOOP_COMMON_LIB_NATIVE_DIR=$HADOOP_INSTALL/lib/native
export HADOOP_OPTS="-Djava.library.path=$HADOOP_INSTALL/lib"
#HADOOP VARIABLES END
$ source ~/.bashrc
```







5. பின்னர் hadoop folder-க்குள் உள்ள configuration files-ல் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பின்வருமாறு காணலாம். Hadoop ஒவ்வொரு முறை செயல்படத்

துவங்கும்போதும் இதில் காணப்படுகின்ற மதிப்புகளை வைத்தே தனது செயல்பாட்டினைத் துவக்கும் .

5.1. hadoop-env.sh என்பதற்குள் பின்வருமாறு சேர்க்கவும் அல்லது ஏற்கனவே comment செய்யப்பட்டு இருப்பின் uncomment செய்துவிடவும்.

```
$ sudo vim /usr/local/hadoop/hadoop-3.0.0/etc/hadoop/hadoop-env.sh
JAVA_HOME=/usr/lib/jvm/java-8-openjdk-amd64/jre/
```



```
# All others are optional.  However, the defaults are probably not
# preferred.  Many sites configure these options outside of Hadoop,
# such as in /etc/profile.d

# The java implementation to use. By default, this environment
# variable is REQUIRED on ALL platforms except OS X!
export JAVA_HOME=/usr/lib/jvm/java-8-openjdk-amd64/jre/

# Location of Hadoop.  By default, Hadoop will attempt to determine
```

5.2. core-site.xml என்பதற்குள் config. tags-க்கிடையில் பின்வருமாறு சேர்க்கவும். பின்னர் இதில் குறிப்பிட்டுள்ளது போலவே ஒரு directory-ஐ உருவாக்கி அதற்கு முழு அனுமதிகளையும் வழங்க வேண்டும்.

```
$ sudo vim /usr/local/hadoop/hadoop-3.0.0/etc/hadoop/core-site.xml
<configuration>
<property>
<name>hadoop.tmp.dir</name>
<value>/app/hadoop/tmp</value>
<description>A base for other temporary directories.</description>
</property>


<property>
<name>fs.default.name</name>
<value>hdfs://localhost:54310</value>
<description>The name of the default file system. A URI whose
scheme and authority determine the FileSystem implementation. The
uri's scheme determines the config property (fs.SCHEME.impl) naming
```

```
the FileSystem implementation class. The uri's authority is used to
determine the host, port, etc. for a filesystem.</description>
</property>
</configuration>
```

```
$ sudo mkdir -p /app/hadoop/tmp
$ sudo chown -R nithya:nithya /app
```



```
<!-- Put site-specific property overrides in this file. -->

<configuration>
 <property>
        <name>hadoop.tmp.dir</name>
  <value>/app/hadoop/tmp</value>
  <description>A base for other temporary directories.</description>
 </property>
 <property>
   <name>fs.default.name</name>
   <value>hdfs://localhost:54310</value>
   <description>The name of the default file system.  A URI whose
   scheme and authority determine the FileSystem implementation.  The
   uri's scheme determines the config property (fs.SCHEME.impl) naming
   the FileSystem implementation class.  The uri's authority is used to
   determine the host, port, etc. for a filesystem.</description>
 </property>
</configuration>
```



```
nithya@nithya-Lenovo-ideapad:~$ sudo mkdir -p /app/hadoop/tmp
[sudo] password for nithya:
nithya@nithya-Lenovo-ideapad:~$ sudo chown -R nithya:nithya /app
nithya@nithya-Lenovo-ideapad:~$
```

5.3. mapred-site.xml.template என்று இருந்தால் mapred-site.xml என பெயர்மாற்றம் செய்து விடவும். பின்னர் அதன் config. tags-க்கிடையில் பின்வருமாறு சேர்க்கவும்.

```
$ sudo mv /usr/local/hadoop/hadoop-3.0.0/etc/hadoop/mapred-
site.xml.template /usr/local/hadoop/hadoop-3.0.0/etc/hadoop/mapred-site.xml
```

```
$ sudo vim /usr/local/hadoop/hadoop-3.0.0/etc/hadoop/mapred-site.xml
<configuration>
<property>
<name>mapred.job.tracker</name>
<value>localhost:54311</value>
<description>The host and port that the MapReduce job tracker runs
at. If "local", then jobs are run in-process as a single map
and reduce task.
</description>
</property>
<configuration>
```




5.4. hdfs-site.xml என்பதற்குள் config. tags-க்கிடையில் பின்வருமாறு சேர்க்கவும். பின்னர் இதில் குறிப்பிட்டுள்ளது போலவே directories-களை உருவாக்கி அதற்கு முழு அனுமதிகளையும் வழங்கவும்.

```
$ sudo vim /usr/local/hadoop/hadoop-3.0.0/etc/hadoop/hdfs-site.xml
<configuration>
<property>
<name>dfs.replication</name>
```

```
<value>1</value>
<description>Default block replication.
The actual number of replications can be specified when the file is
created.
The default is used if replication is not specified in create time.
</description>
</property>
<property>
<name>dfs.namenode.name.dir</name>
<value>file:/usr/local/hadoop_store/hdfs/namenode</value>
</property>
<property>
<name>dfs.datanode.data.dir</name>
<value>file:/usr/local/hadoop_store/hdfs/datanode</value>
</property>
<configuration>
```

```
$ sudo mkdir -p /usr/local/hadoop_store/hdfs/namenode
$ sudo mkdir -p /usr/local/hadoop_store/hdfs/datanode
$ sudo chown -R nithya:nithya /usr/local/hadoop_store
```

```
<!-- Put site-specific property overrides in this file. -->

<configuration>
 <property>
  <name>dfs.replication</name>
  <value>1</value>
  <description>Default block replication.
  The actual number of replications can be specified when the file is created.
  The default is used if replication is not specified in create time.
  </description>
 </property>
 <property>
  <name>dfs.namenode.name.dir</name>
  <value>file:/usr/local/hadoop_store/hdfs/namenode</value>
 </property>
 <property>
  <name>dfs.datanode.data.dir</name>
  <value>file:/usr/local/hadoop_store/hdfs/datanode</value>
 </property>
</configuration>
~
~
```

```
nithya@nithya-Lenovo-ideapad:~$ sudo mkdir -p /usr/local/hadoop_store/hdfs/namen
ode
nithya@nithya-Lenovo-ideapad:~$ sudo mkdir -p /usr/local/hadoop_store/hdfs/datan
ode
nithya@nithya-Lenovo-ideapad:~$ sudo chown -R nithya:nithya /usr/local/hadoop_st
ore
nithya@nithya-Lenovo-ideapad:~$
```

6. பின்னர் /etc/hosts கோப்பிற்குள் அனைத்துக் கணினிகளின் IP முகவரி மற்றும் hostname-ஐச் சேர்க்க வேண்டும்.

```
$ sudo vim /etc/hosts
192.168.1.2 nithya-Lenovo-ideapad
```



```
127.0.0.1       localhost
192.168.1.2     nithya-Lenovo-ideapad

# The following lines are desirable for IPv6 capable hosts
::1     ip6-localhost ip6-loopback
fe00::0 ip6-localnet
ff00::0 ip6-mcastprefix
```

7. கடைசியாக hfs-ஐ ஒருமுறை format செய்து பயன்படுத்தத் தொடங்கவும். துவங்கிய பின் இடையில் எப்போதும் இக்கட்டளையை அளிக்கக் கூடாது . அவ்வாறு செய்தால் hfs-ல் சேமிக்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் அழிக்கப்பட்டு datanode-ல் பிரச்சனை ஏற்பட்டுவிடும்.

```
$ hadoop namenode -format
```



```
nithya@nithya-Lenovo-ideapad:~$ hadoop namenode -format
WARNING: Use of this script to execute namenode is deprecated.
WARNING: Attempting to execute replacement "hdfs namenode" instead.

2018-03-19 18:27:40,158 INFO namenode.NameNode: STARTUP_MSG:
/************************************************************
STARTUP_MSG: Starting NameNode
STARTUP_MSG:   host = nithya-Lenovo-ideapad/192.168.1.2
STARTUP_MSG:   args = [-format]
STARTUP_MSG:   version = 3.0.0
STARTUP_MSG:   classpath = /usr/local/hadoop/hadoop-3.0.0/etc/hadoop:/usr/local/
hadoop/hadoop-3.0.0/share/hadoop/common/lib/kerb-common-1.0.1.jar:/usr/local/had
oop/hadoop-3.0.0/share/hadoop/common/lib/kerb-simplekdc-1.0.1.jar:/usr/local/had
oop/hadoop-3.0.0/share/hadoop/common/lib/commons-codec-1.4.jar:/usr/local/hadoop
